# மண்

1990 - 2015

இதழ் 169

2015

தை / மாசி
January / February



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி

அருளகம்-வவுனியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே


- எங்கள் கருத்து
- சிறுவர்வட்டம்
- வினாவிடைப்போட்டி
- சிறுவர்போட்டிகள்
- குறளும் பொருளும்
- கவிச்சோலை
- இலக்கியச் சாரல்
- சிறுகதை, கட்டுரை
- குறுக்கெழுத்துப்போட்டி
- சுகாதாரக்குறிப்புகள்
- செய்திக்கண்ணோட்டம்
- ஆதரவற்றோர் உதவிநிதி



முகவரி: V. Sivarajah
Am Windhovel 18A
47249 Duisburg-Germany

தொலைபேசி: 0203/8073898

தொலைநகல்: 0203/8073898

மின்னஞ்சல்: v.sivarajah@arcor.de



வங்கிவிபரம்:
Mann (Erde) Verein e.V. Duisburg
Stadtsparkasse Duisburg
Kontonummer: 225 000 421
Bankleitzahl: 350 500 00
IBAN-Nr.: DE41 3505 0000 0225 0004 21
SWIFT-BIC: DUISDE33XXX




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் கருத்து...

## 25 ஆண்டுகள் கடந்து!. உங்கள் மண் சஞ்சிகை!.

கடந்த 1990ம் ஆண்டு தை மாதம் ஆரம்பிக்கப்பட்ட மண் சஞ்சிகை 2015 தை மாதம் 25 ஆண்டுகளை நிறைவு செய்து வரலாற்றுச் சாதனை படைத்திருப்பதைப் பெருமையுடன் கூறிக்கொள்கிறோம். வாசகர்கள் ஆக்கதாரர்கள், மற்றும் நலன்விரும்பிகள் அளித்துவந்த ஆக்கமும் ஊக்கமும் ஒத்துழைப்புமே இவ்வளவு காலங்களாக நீண்டு நிலைப்பதற்கு அடிப்படைக்காரணமாகும். இவ்வேளையில் இவர்கள் அனைவருக்கும் முதற்கண் மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

எங்களாலும் உங்களாலும் நேசிப்புடன் வளர்த்தெடுக்கப்பட்ட இச்சஞ்சிகையானது புலம்பெயர் நாடு ஒன்றில் தொடர்ச்சியாக 25 ஆண்டுகள் வெளிவந்து ஓர் வரலாற்றுச் சாதனையை எட்டிப் பிடித்திருப்பது யாவருக்கும் மகிழ்வான விடையமாகும். இந்த இருபத்தைந்து ஆண்டுகாலப்பகுதியில் மண் சஞ்சிகையானது பல பணிகளைச் செய்திருக்கின்றது. கல்வி, கலை, இலக்கியப் பணிகள் மட்டுமல்லாது பெரும் சமூகப் பணிகளையும் மெற்கொண்டு வருவதை நீங்கள் அறிவீர்கள். குறிப்பாகத் தமிழ் வளர்ச்சி, சிறுவர், இளையோர் தாய்மொழிக்கல்வி, அறிவியல் வாழ்வியல் துறைகளில் கணிசமாகப் பங்காற்றிவருவதை நீங்கள் அறிவீர்கள். பல நூறு எழுத்தாளர்களைப் புலம்பெயர் தேசத்தில் உருவாக்கியிருக்கின்றது.. இவை மட்டுமல்லாமல் தாயகத்தில் பல ஆண்டுகளாகப் போரினால் பாதிக்கப்பட்ட ஆதரவற்றோர், வலுவிழந்தோர், முதியோர் எனத் தொடர்ச்சியாக நிதிஉதவிகள் புரிந்துவரும் பணிகளையும் செய்து மனிதநேயக் கடமைகளையும் முன்னெடுத்துவருவது வாசகர்களாகிய உங்களுக்குத் தெரிந்த விடையமே இந்த மனிதநேயக் கடமைகளில் இணைந்து நிதிப்பங்களிப்புகள் செய்துவரும் அத்தனை நல்லுள்ளங்களையும் சிரம்தாழ்த்தி நன்றிபகர்கின்றோம்.

கல்வி கலை, இலக்கிய, சமூக சஞ்சிகையான மண் சஞ்சிகையைத் தொடர்ச்சியாக நாம் வெளியிட்டு வருவதில் பல நெருக்கடிகளையும் சந்தித்து வந்துள்ளோம். புலம்பெயர் சூழலில் குடும்ப நெருக்கடிகளுடன் நிதி, நேரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைச்சுமை, கணனிப் பதிவுவேலைகள் எனப் பலதரப்பட்ட சுமைகளோடுதான் இச்சஞ்சிகை ஒழுங்காக இவ்வளவு காலமும் வெளிவந்துகொண்டிருக்கின்றது. குடும்பத்தவர்கள், ஆக்கதாரர்கள் நலன்விரும்பிகள், நண்பர்கள், உறவுகள் என அனைவரும் ஒத்துழைப்பு வழங்கி வருவதாலேயே நாம் நீண்ட இப்பணியைத் தொடரக்கூடியதாக உள்ளது என்பதே உண்மையாகும்.

வாசகர்கள், நலன்விரும்பிகள் இச்சஞ்சிகையில் நம்பிக்கை கொண்டு அளித்துவரும் நிதி உதவிகளால் இன்றுவரை தாயகத்தில் பலநூறு ஆதரவற்றசிறார்கள், வலுவிழந்தோர் வாழ்வு மலர்ச்சிகண்டுவருவதை தாயகத்தில் இருந்து எமக்கு வரும் கடிதங்கள் மண் சஞ்சிகையில் வெளிவரும் போது பலர் வாசித்து அறிந்துகொண்டிருக்கிறார்கள் என்னும்போது மிகப்பெரும் மனித நேயப் பணியை உங்களின் ஒத்துழைப்புடன் செய்து வருகின்றோம் என்பதே உண்மையாகும்.

காலத்தால் அழியாத கடமைகளை செய்துவரும் அனைத்துத் தரப்பினருக்கும் மனம்நிறைந்த நன்றிகளைப் பகர்ந்து நிற்கின்றோம்.தற்போது இச்சஞ்சிகைக்கு எழுதும் சிறுவர்களின் தொகை குறைவடைந்துவருவது வேதனைக்குரிய விடையமாகும் புலம்பெயர் வாழ்வியல் சூழலில் இதற்குப்பல காரணங்கள் இருந்தாலும் நம்மைப்பெற்ற தாயையும் நாம் பேசிவளர்ந்த தாய்மொழியையும் நாம் மறக்கலாமா!..இன்னும் பல எழுத்தாளர்கள், படைப்பாளிகள் உருவாகவேண்டும். கலை இலக்கியப் படைப்புக்கள் பெருக வேண்டும். தமிழ் அழியாது பாதுகாக்கப்பட வேண்டும். இப்பணிகளுக்காக அனைவரும் ஒன்றுசேர்ந்து வடம்பிடித்து மண் சஞ்சிகை என்னும் தேரை இழுத்துச் செல்வோம் என அனைத்து நல்லுள்ளங்களையும் அன்போடு அரவணைத்துக் கொள்கிறோம்.

மண் சஞ்சிகையின் வெள்ளிவிழா சித்திரை மாதம் டியூஸ்பேர்க் நகரில் சிறப்பாகக் கொணடாடவுள்ளோம். வெள்ளிவிழாப் போட்டிகளில் கலந்து கொள்வதுடன் விழாவையும் கண்டுகளித்திட அன்போடு வரவேற்கின்றோம்!.. நற்பணிகளோடு நனிசிறந்து வாழ்வோம்!..

ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திசூடி விளக்கம்!...




## அனந்தல் ஆடேல்..

மனிதனுக்கு உழைப்பைப் போலவே ஓய்வும் வேண்டும். ஒரு சராசரி மனிதன் ஒரு நாளைக்கு ஐந்திலிருந்து ஆறுமணி நேரம் தூங்க வேண்டும். அப்போதுதான் அவன் பகலில் இழந்த சக்தியை களைத்த உடலினால் ஈடுசெய்ய முடியும். இந்த அளவு மாறுபடலாம். உலகமேதைகள் அதிகநேரம் தூங்கியதில்லை என்று வரலாறுகள் கூறுகின்றன. ஆனால் சிலர் 24 மணி நேரத்தில் 12, 18 மணிநேரம் நித்திரைகொள்ளும் சுபாவமுடையவர்களாக இருப்பார்கள்.. இரவில்லாது பகலிலும் தூங்குவார்கள். இத்தகைய சோம்பேறிகளால் எந்தக் கடமையைச் செய்ய முடியும்!...பிறர் பழிப்புக்கு ஆளாகவே நேரும்.. ஆகவே அளவுக்கு அதிகமாக நித்திரை கொள்ளக்கூடாது. இதையே ஆத்திசூடியில் அனந்தல் ஆடேல் என்று எடுத்துரைத்துள்ளார் ஔவைப்பாட்டி. (அனந்தல் என்றால் தூக்கம்)

## கடிவது மற..

நீ பொக்கிஷமாக ஒரு பொருளைப் பாதுகாக்கிறாய். அதன்மீது உனக்கு அளவில்லாத ஆசை. ஒரு நாள் அதை உன் தம்பியோ தங்கையோ தெரியாமல் பாழ்படுத்தி விடுகிறார்கள். அதைக் கண்டதும் உனக்குக் கோபம் குமுறிக்கொண்டு வருகின்றது.. அது இயற்கைதான். அவர்களைத் திட்டுகிறாய். கடுமையாகப் பேசுகிறாய். சண்டைபிடிக்கிறாய். அத்தனை ஆத்திரம் அவர்கள் மீது உனக்கு. அவர்கள் செய்தது தவறுதான். ஆயினும் நீ இவ்வளவு கோபப்பட்டிருக்கக்கூடாது. அவர்கள் மனம் வருந்தும்படி பேசியோ சண்டைபிடித்தோ நடந்தோ இருக்கக்கூடாது. அன்பாகப்பேசி அவர்கள் செய்த தவறைத் திருத்துவதுதான் நல்ல செயல். பிறர்மனம் புண்படும்படி கடுமையாக எப்போதும் நடந்துகொள்ளாதே..கோபப்படுவதை மறந்துவிடு என்கிறார் ஔவைப்பாட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமையே பலம்

ஆபிரிக்காட்டிலே அழகிய நதிக்கரையிலே பலவிதமான மிருகங்கள் வாழ்ந்து வந்தன. நதிக்கரைக்கு நீர்குடிக்க வரும் மிருகங்களைப்பதுங்கி இருந்து வேட்டையாடி பசியைத்தீத்துக்கொள்வது சிங்கக் கூட்டத்தின் வழமையான வேலையாக இருந்தது ஒருநாள் நதிக்கரை வழியாக இரண்டு எருமைகள் தமது கன்றுகளுடன் வந்து கொண்டு இருந்ததுன. ஆனால் அவ்வழியில் பசியுடன் சிங்கக்கூட்டம் காத்திருந்தது. எருமைகள் வருவதைக்கண்ட சிங்கக்கூட்டம் எருமைகளை அருகில் வருவதை எதிர்பார்த்துக்கொண்டு மிக ஆவலாகஇருந்தன.

எருமைகள் சிங்கக்கூட்டமருகே வந்துவிட சிங்கக்கூட்டம் எருமைக்கன்றைத்தாவிப் பிடித்துவிட்டன. உடனே இரண்டு எருமைகளும் தப்பித்து ஓடி விட்டன. சிங்கக் கூட்டத்திடம் அகப்பட்ட எருமைகன்றுதனது உயிரைக்காப்பாற்ற போராடியது அருகே உள்ள நதியில் விழுந்துவிடவே சிங்கக் கூட்டங்கள் எருமைக்கன்றை விடுவதாக இல்லை சிங்கங்கள் ஒருவாறு நதிக்குள் இருந்து எருமைக்கன்றைமேலே இழுக்க ஆற்றில் இருந்த முதலையும் எருமைக் கன்றை பிடித்து இழுத்தது.

சிங்கங்களும் விடுவதாகஇல்லை முதலை தோற்றுப் போனது. சிங்கக்கூட்டம் எருமைக்கன்றை நதி நீரிலிருந்து வெளியே எடுத்துவிட்டது. சிங்கக்கூட்டத்தின் வேட்டைப்படலம் தொடரஆரம்பித்து விட்டது எருமைக்கன்று தன்னால் முடிந்தவரைசிங்கக் கூட்டத்திடம் தனது உயிரைக்காப்பாற்றப் போராடிக்கொண்டு இருந்தது.சிறிது நேரத்தில் தாய்எருமை தனதுகூட்டத்துடன் அங்கு வந்து கன்றுக்குட்டியை சிங்கத்திடம் இருந்து மீட்கப் போராடின. சிங்கத்தை ஒரே வேகத்திஒடிப்போய் தூக்கி எறிய ஏனைய சிங்கங்கள் திகைத்து ஓட, எருமைக்கன்று எழுந்து ஓடித் தனது கூட்டத்தில் மறைந்தது.எருமைகள் சிங்கத்தை துரத்த ஆரம்பித்தன சிங்கக் கூட்டங்கள் ஒரே ஓட்டமாக ஓடி மறைந்தன.எருமைகள் பலமான சிங்க கூட்டத்தை எதிர்த்து தனதுகன்றைக்காப்பாற்றி வெற்றி பெற்றன.

கருத்துரை -

ஒற்றுமையாக இருந்தால் பலசாலிகளையும் வெல்ல முடியும் குறிப்பு - உண்மைச்சம்பவத்தை அடிப்படையாக கொண்டு எழுதிய கதை

ஈழமுருகதாசன்
ஜேர்மனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வகுப்பில் நடந்தகதை...

முதலாம் ஆண்டு படிக்கும் குழந்தைகளுக்கு படம் பார்த்துக் கதை சொல்லும் வகுப்பு எடுத்துக்கொண்டிருந்தார் ஆசிரியர். ஆலமரத்தில் கூடு கட்டி முட்டையிட்டிருக்கும் காகத்தின் முட்டைகளை அதே மரத்தின் பொந்தில் வசிக்கும் பாம்பு உடைத்துக் குடித்து வருவதையும், பாம்மைப் பழிவாங்க நினைக்கும் காகம். ராணியின் முத்து மாலையை காவலர்கள் கண்முன்னே எடுத்து வந்து அதைப் பாம்பு வசிக்கும் பொந்தில் போட பாம்பைக் கொன்று முத்துமாலையை காவலர்கள் எடுத்துச் சென்று காகத்தை அதன் பிரச்சனையிலிருந்து விடுவிப்பதையும் குழந்தைகளுக்குப் புரியும்படி விளக்கமளித்துக்கொண்டிருந்தார் ஆசிரியர்.

தலையைத் தலையை ஆட்டியபடி எல்லாக் குழந்தைகளும் கதையை ரசிக்க ஒரே ஒரு குழந்தை மட்டும் எழுந்து நின்று இது என்ன கதை ரீச்சர் என்று கேட்டது. நீதிக்கதை என்றார் ஆசிரியர். இந்தக் கதையில் எங்க...நீதி இருக்கிறது ரீச்சர். தன்னைவிடப் பலசாலிகளான எதிரிகளைத் தன்னுடைய புத்திசாதுர்யத்தால் வீழ்த்தி வெற்றி பெறவேண்டும் என்றார் ஆசிரியர். அதுக்காகக் காகம் என்ன செய்தது என்றது குழந்தை..ராணியின் முத்துமாலையை பொந்துக்குள்ளே போட்டது என்றார் ஆசிரியர்.

ஒருவருக்குச் சொந்தமான பொருளை அவர்களுக்குத் தெரியாமல் எடுத்துக்கொண்டு வந்தால் அதுக்கு என்ன பேர்!.. என்றது குழந்தை. திருட்டு என்றார் ஆசிரியர். அப்போ இந்தக் கதையில் திருடுறதுக்குத்தானே சொல்லித் தந்தீர்கள்.. திருடுகிறது தப்புத்தானே எனக்கேட்டது குழந்தை. குழந்தையின் அக்கேள்விக்கு ஆசிரியரால் பதில் சொல்ல முடியவில்லை. குழந்தை மேலும் தொடர்ந்தது. என்னதான் காக்கையின் முட்டைகளை பாம்பு குடித்தாலும் அதற்காகப் பாம்பைக் கொலை செய்வது தப்பில்லையா!... பாம்பும் ஒரு உயிர்தானே என்றது குழந்தை. ஆசிரியர் தப்புத்தான் என்றார். இந்தக் கதையில் திருட்டைப் பற்றியும் கொலை செய்கிறதைப் பற்றியும்தானே என்று குழந்தை கேள்வி கேட்டது. வயதுக்கு மீறிய பேச்சுக்களைப் பேசும் குழந்தைகளையும் அதுவரை திரைப்படங்களில் மட்டும் பார்த்துவந்த ஆசிரியர் குழம்பினார். இதே கதையைத்தான் நம் பெற்றோரும் படித்திருக்கின்றனர். நாமும் படிக்கின்றோம்...யாராவது இந்தக் கோணத்தில் சிந்தித்திருக்கிறோமா!....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை தொடர்ந்தது. காக்கையின் முட்டைகளும் பத்திரமாக இருக்கவேணும். பாம்பும் சாகக்கூடாது. அதுக்கு உங்களுக்கு வேற வழி ஏதும் தெரியவில்லையா ரீச்சர்!...எனக்கேட்டது குழந்தை. தெரியேல்லையே... ராஜா... என்று தோல்வியை ஒப்புக்கொண்டார் ஆரிரியர். அவர் மனது அந்தக் குட்டிப் பையனின் கேள்விகளால் குறு குறுத்தது. குறை கூறத்தெரிந்த குழந்தையின் மனதில் ஏதும் ஐடியா இருக்குமோ..என்று அறியும் ஆர்வம் பீறிட.. வேறு ஏதும் வழி இருக்கிறதா என்றார் ஆசிரியர்.

உடனே குழந்தை இருக்கிறது என்றது. எங்கு சொல்லு பார்ப்பம் என்றார் ஆசிரியர். காகம் சாது..பாம்பு துஷ்டன்.. துஷ்டனைக் கண்டால் தூர விலகு என்று சொல்லியிருக்குத்தானே. ஆனபடியால் பொந்து இல்லாத வேறு ஓர் மரத்தில் போய்க் காகம் கூடுகட்டி முட்டையிட்டால் முட்டையும் பத்திரமாக இருக்கும். பாம்பும் செத்திராது. இல்லையா!... எனக்கூறினான். ஆசிரியர் இப்படி ஒரு கோணத்தில் ஏன் இதுவரை நாம் சிந்தித்துப் பார்த்ததில்லை என்று ஆச்சரியப்பட்டார்.

நம்முடைய தலைமுறைவரை நாம் கேள்வியே கேட்காமல் பெரியவர்கள் எது சொன்னாலும் சரி என அப்படியே நம்பிக்கொண்டிருந்தோம். ஆனால் இன்றைய பிள்ளைகளோ துணிந்து கேள்வி கேட்டுச் சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்கின்றனர். இது வரவேற்கத்தக்க முன்னேற்றம்தான். ஆகவே நாம் யார் எது சொன்னாலும். அந்த விடையத்தை ஏன்!..எப்படி!...எதற்காக!.. என்று எல்லாம் ஒருமுறை சிந்தித்து முடிவு எடுத்தல் வேண்டும்.

## இன்பம்!.......

சில மனிதரிடம் இது உண்டு சிலரிடம் இல்லை
இன்பமும் துன்பமும் நிறைந்ததுதான் வாழ்க்கை
அந்த வாழ்க்கையினை வாழ்வது உனது கையில்தான் உண்டு
மானிடா!..நீ துன்பத்தை நினைத்து அழாதே
என்றோ ஒரு நாள் உனக்கு இந்த இன்பம் வரும்!..
அப்போது நீ பட்ட துன்பத்தை நினைப்பாய் சிரிப்பாய்
என்றோ ஒரு நாள் வரும் என்ற நம்பிக்கையை விட்டுவிடாதே
அந்த நம்பிக்கை உள்ளவரை இன்பம் உண்டு
இன்பம் உள்ளவரை மானிடா நீயும்தான் உண்டு!..

செல்வி. சாதனா தேவானந்தராசா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சம்தவிர்!..

அச்சம் தவிர் என்றார் பாரதி அன்று. நிஜமாக அகற்றப்படவேண்டியதை அன்றே கண்டான் மனிதன். ஆனால் இன்றும் அதே அச்சம் தொடர்வதன் மர்மம்தான் ஏது? எனக் கேட்டால் அது வளர்ப்பின் துளிர்ப்பிலே அமைகிறதா?இயற்கையாகத் துளிர்க்கிறதா? என வினாவும் எழுகிறது. இரு வழிகளாலுமே வருகிறது எனலாம்.

அச்சம் என்பது பரம்பரை அலகுகளின் மாற்றங்களிலும் வருகிறதைப் பார்க்கிறோம். பரம்பரையாய் பயத்தை தம்முள் தாங்குபவர்களின் சந்ததிகள் பயத்துடன் வாழ்வதைப் பார்க்கிறோம். இன்று அகற்றப்படவேண்டியவை அச்சம் வெட்கம் கூச்சம். இவை வளரின் புலம்பெயர்வில் பாதிப்புகளை பிள்ளை எதிர் நோக்குகிறது. பல இலக்குகளை அடைய முடியாமல் போகிறது. எதிர்காலத்தை சூனியமாக்குகிறார்கள். இதை காலம் தாழ்த்தி உணர்கையில் பாதிப்பு அவர்களுக்கே உரியதாகிறது.

படிப்பும் தொழிலும்தான் வாழ்வென ஆரம்பம்முதலே ஊட்டும் பெற்றோரால் பிள்ளையின் தன்னம்பிக்கையைவளர்க்க முடியவில்லையே? துணிவும் சுயஆற்றலையும் எதையும் எதிர்கொள்ளும் தன்மையையும் ஆரம்பம் முதல்முக்கியத்துவம் கொடுத்து வளர்த்தால் எதிர்காலம் பிரகாசமாக பிள்ளைகளுக்கு இருப்பதை உணரலாம்.

சின்ன வயதிலே விழுந்துவிடுவாய் அங்கே போனால் அது பயம் அதை எடுத்தால் விழுந்துவிடும் என ஆரம்பம் முதலே பயத்தை முளையிலே வளர்த்தால் பயமும் துணிவற்ற தன்மையும் பிஞ்சு மனதில் ஒட்டிக் கொள்ளுமே! இது பிற்காலத்தில் எதிர் வினைகளை தோற்றுவித்து வாழ்கையை கேள்விக்குறியாக்குகிறது. எனவே அச்சம் தவிர்! துணிவை வளர் முயன்று எழ உயர்வு உண்டு

திருமதி நகுலா சிவநாதன்.
ஜேர்மனி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குதிரை..

கரீம் என்பவன் தன் தந்தை இறந்தபின் வியாபாரத் தொழிலை மேற்கொண்டான். இதனால் குதிரைகள் வேண்டி விற்பதும் வண்டி ஓட்டிப் பிழைப்பதும் தொழிலாக இருந்து வந்தது. இதற்காக குதிரை வேண்டுவதற்காக தனக்குத் தெரிந்த மூவரையும் அழைத்துக்கொண்டு பிற ஊர்ச் சந்தைக்குப் புறப்பட்டான். போகும் வழியில் பிரியாணிக்கடை ஒன்று வரவே ஒருவன் கூறினான்.. சந்தையில் அலைந்து திரிந்து குதிரை வேண்டவேண்டும்.. இதனால் பசி எடுக்கும் ஆகவே இங்கேயே சாப்பிட்டுவிட்டுப் போவோம் என்றான். வேறுவழியின்றிக் கரீம் மூவருக்கும் பிரியாணி வேண்டிக் கொடுத்தான். கரீம் தேநீரும் பணிஸ் சிற்றுண்டிகளை வேண்டி உண்டான்.

சிறிது தூரம் நடந்து சென்றதும் இன்னொருவன் கூறினான் எனக்குக் காலில் முட்டிவலியாக இருக்கின்றது ஆட்டோ ஒன்றைப் பிடித்துச் சந்தைக்குப் போவோம் என்றான். அவர்களின் வேண்டுகோளை மறுக்கமுடியாத கரீம் ஆட்டோ ஒன்றை வாடகைக்கு அமர்த்தி சந்தையைப் போய்ச் சேர்ந்தனர். குதிரைகளை மூவரும் பார்வையிட்டனர் ஒருவருக்குப் பிடித்தால் மற்றவருக்குப் பிடிக்காது. அதுமட்டுமல்லாது அடிமாட்டுவிலைக்குக் (மிகவும் குறைந்த விலை) கேட்பார்கள். இதனால் குதிரை விற்பவர்களுக்கும் இவர்களுக்குமிடையே சண்டையே வரும். குதிரைக்குச் சுழி சரியில்லை, கால் சரியில்லை, நிறம்சரியில்லை மூன்று மாதங்களில் வண்டி ஓட்டப் பயன்படாமல் போய்விடும், நீ அனுபவம் இல்லாதவன் என்று சொல்லியே அவன் வாயை அடைப்பார்கள். இறுதியில் குதிரை வேண்டாமலே " நாளைக்குக்கூடும் அடுத்த ஊர்ச் சந்தையில் வாங்கித் தருகிறோம் என்றுகூறி வீடு திரும்ப ஆயத்தமானார்கள்.

இந்த மூவரையும் பற்றித்தெரிந்த ஒருவன் கரீமுக்குக்கூறினான் "இவர்களுடன் இனிமேலும் குதிரை வாங்க வந்தால் குதிரையின் ஒரு பல்லைக்கூட வாங்கமாட்டாய்" நல்லதோ கெட்டதோ நீ தனியாக வந்து வாங்கு!..உள்நாட்டுச் சந்தையில் வேண்டாதவர்களா வெளிநாட்டுச் சந்தையில் வாங்கித்தரப் போறாங்கள்.!..என்று அறிவுரை கூறி அனுப்பினான். மறுநாள் கரீம் தனியாக வந்து தனக்குப்பிடித்த குதிரையை வேண்டிச்சென்றான்..

செல்வி எஸ்.சரண்யா
ரூத் மிஷன் – கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனை மாணவி!...

ஐரோப்பிய சட்டத்துறையில் பரிஸ்ரர் (Barrister) பட்டம்....பிரான்ஸ் தமிழ் மாணவியின் உயர் சாதனை..... உலகின் முன்னணி பல்கலைக்கழகங்களில் ஒன்றான Paris-Sorbonne UniveNouvelle imagersity இன் இவ்வாண்டிற்கான புலமைசார் உயர் கல்வியை (Professional Higher Studies) நிறைவு செய்து சட்டத்துறையின் மனித உரிமைகள் சார் (Human Rights) பரிஸ்ரர் பட்டம் பெற்றுள்ளார் பிரான்சின் தமிழ் மாணவி ஒருவர்.ontoise நகரில் வசிக்கும் செல்வி. ஆன் குகநாதன் என்கின்ற மாணவியே Barrister தகமையுடன் ஐரோப்பிய சட்டத்துறைக்குள் நுழைகிறார். அண்மைய காலங்களில், புலம்பெயர் தமிழ் சமூகத்தின் இளையவர்கள், தாம் வாழும் நாடுகளையும் தாண்டி சர்வதேச அளவில் கல்வித் தகமைகளில் மேம்பட்டு சாதனை படைத்து வருகிறார்கள்.

இனம்-மதம்-சாதி-பால் என ஒரு வட்டத்தினுள் அடங்கிவிட்ட எமது தலைமுறையின் சிந்தனைகளை உடைத் தெறிந்து, மாற்றம் காணும் இன்றைய உலகத்துடன் , நம் எதிர்கால சமூகமும் இணைந்து வருவதை மகிழ்வுடன் அனைவரும் எதிர் கொள்ள வேண்டும். அவர்களது சாதனைகளை வாழ்த்தி வரவேற்க வேண்டும் ,இதன் மூலம் எனைய மாணவ சமூகம் ஊக்குவிக்கப்பட வேண்டும்.இலங்கை வரலாற்றில் மருத்துவம், பொறியியல், கணக்கியல், சட்டம் போன்ற துறைகளில் அதி உயர் பட்டமும் பாண்டித்தியமும் பெற்று புகழடைந்தவர்கள் கூடுதலாக ஆண்களாகவே இருந்தனர் 1960-1970 காலப்பகுதிகளில். குறிப்பாக சட்டத்துறையில் அன்றைய காலங்களில் பரிஸ்றர் (Barrister),கியூ.சி (Quen Council ) போன்ற உயர் தகைமைகளை பெற்று இலங்கையின் நீதித் துறை வராலாற்றில் இடம் பிடித்தவர்கள் ஒரு சிலராக அதுவும் ஆண்களாகத்தான் இருந்தார்கள்.

இந்த வரிசையில் திருவாளர்கள் ஜீ.ஜீ. பொன்னம்பலம்,எம்.திருச்செல்வம்,எஸ். ஜே.வி.செல்வநாயகம் ,கொல்வின் ஆர் டி சில்வா, பீற்றர் கெனமன், திஸ்ஸ விஜயறட்ணே , மு.சிவசிதம்பரம், சி.கதிரவேற்பிள்ளை, காமினி அத்துக்கொறள இப்படி சிலரை மட்டுமே சொல்லலாம்.இந்த நிலைமைகள் மாற்றப்பட்டு இன்றைய இளம் சமூகம் குறிப்பாக புலம் பெயர் இளையோர் கல்வியில் மட்டுமல்ல அனைத்து ஆரோக்கியமான துறைகளிலும் சாதனை படைத்து வருகிறார்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இதன் தொடர்ச்சியாக தனது 24வது வயதில் பரிஸ்றர் தகைமையுடனான ஒரு சட்டத்தரணியாக ஐரோப்பிய சட்டப் பரப்பில் வலம் வரவுள்ள செல்வி .ஆன் குகநாதனை நாமும் வாழ்த்தி வரவேற்போம்.

இவர் புலம் பெயர் தமிழ் ஊடகத்துறையின் ஆரம்ப கர்த்தாவும் டான் தொலைக்காட்சி நிறுவனத்தின் ஸ்தாபக இயக்குனருமான திரு எஸ்.எஸ். குகநாதன்-றஜனி தம்பதிகளின் புதல்வி என்பது குறிப்பிடத்தக்கது.

கோவை நந்தன்.

---

## தகவல்கள்-

-அதிசயச் செய்தி ஒன்று திருக்குறளின் 133 அதிகாரங்களையும் 1.330 குறள்களையும் உள்ளடக்கி 400 அடி நீளமான திருக்குறள் புத்தகம் ஒன்றை உருவாக்கி சென்னை மரீனாக் கடற்கரையில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

-Miss World 64 வது வருட உலக அழகிப் போட்டி லண்டனில் நடைபெற்றது. 2014ம் ஆண்டின் உலக அழகியாக மருத்துவக் கல்லூரி மாணவியான ரோலன் ஸ்ட்ராஸ் என்பவர் தெரிவி செய்யப்பட்டார். 121 நாடுகளின் அழகிகள் இப்போட்டியில் கலந்து கொண்டனர்.

-ஜேர்மனி - டுசில்டோவ் என்ற நகர்ப் பகுதியில் 1 லட்சத்து 50 ஆயிரம் யூரோ பெறுமதியான புறா ஒன்று திருடப்பட்டுள்ளதாகவும் அப்புறாவை மீட்டுத்தருவோருக்கு 10.000 யூரோ சன்மானம் வழங்குவதாகவும் புறா வளர்க்கும் பண்ணை முதலாளி ஒருவர் உருக்கமான வேண்டுகோள் விடுத்திருக்கிறார். இந்தப் புறா பல போட்டிகளில் பங்கு கொண்டு பலஆயிரம் யூரோ பரிசு பெற்றதாகவும் இது தனது அதிஸ்ட தேவதை என்றும் அந்த முதலாளி மேலும் தெரிவித்ததாகப் பத்திரிகைச் செய்திகள் குறிப்பிட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினாவிடைப் போட்டி முடிவு- 158
## (கார்த்திகை-மார்கழி 2014)

1. இலங்கையில் பேசப்படும் மொழிகளையும் கடைப்பிடிக்கப்படும் மதங்களும்..

சிங்களம் - தமிழ் - ஆங்கிலம்

பௌத்தம் - இந்து - இஸ்லாம் - கத்தோலிக்கம்

2. இலங்கையிலுள்ள வடகிழக்கு மாகாணசபைகளின் முதலமைச்சர்களின் பெயர்களை எழுதுக..

கிழக்குமாகாணம் - நஜீப் அப்துல் மஜீத்

வடமாகாணம் - சி.வி.விக்னேஸ்வரன்

3-ஸ்கன்டிநேவியன் நாடுகள் என்று அழைக்கப்படும் நாடுகளின் பெயர்களை எழுதுக..

நோர்வே - டென்மார்க் - சுவீடன் - பின்லாந்து

4. உலகத்தில் தற்போது போர், உள்நாட்டுப்போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நான்கு நாடுகளின் பெயர்களை எழுதுக.

சிரியா - ஈராக் - ஆப்கானிஸ்தான் - நைஜீரியா

5. சொற்களைக் கண்டுபிடித்து எழுதுக..

இது வெள்ளை நிறம் -பால்

இச்சொல்லை அன்பு என்றும் கூறலாம் - பாசம்

பாடல்களைப் பாடுபவர் - பாடகர்

இது கசப்பான ஒரு காய் - பாகற்காய்

6. ஆறு எழுத்துச் சொற்கள் ஆறு எழுதுக:-

பனிப்பொழிவு - வடமாகாணம் - திருக்குறள்

மனிதநேயம் - கப்பலோட்டி - விடுமுறைநாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினாவிடைப் போட்டி -159

(தை - மாசி - 2015)

1. இலங்கையின் தற்போதய ஜனாதிபதி, பிரதமரின் பெயர்களை எழுதுக..
   ஜனாதிபதி-----------------
   பிரதமர்--------------------

2. சுனாமி இடம்பெற்றுப் பத்து வருடங்கள் முடிவடைந்துவிட்டன. இலங்கையில் சுனாமியால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட நான்கு இடங்களின் பெயர்களை எழுதுக..
   -------------- ------------ ----------- -------------

3. ஐரோப்பாவில் கடல்வளம் இல்லாத நான்கு நாடுகளின் பெயர்களை எழுதுக.
   ------------- ------------ ----------- -------------

4. தற்போது பனிக்காலம் அல்லவா.. உலகில் பனிப்பொழிவு மிகக் கூடுதலாகக் காணப்படும் நான்கு நாடுகளின் பெயர்களை எழுதுக..
   ------------- ------------ ----------- -------------

5. ஒத்தசொற்கள் / எதிர்ச்சொற்கள் எழுதுக...

| ஒத்தசொற்கள் | | எதிர்ச்சொற்கள் எழுதுக... | |
|---|---|---|---|
| தாய் | - | இனிப்பு | - |
| வாய்மை | - | அரசன் | - |
| இல்லம் | - | மேல் | - |
| உடை | - | இரவு | - |
| சாப்பாடு | - | சூடு | - |

6. ஒரு சொல்லில் மூன்று சொற்களைக் கண்டுபிடித்து எழுதுக.
   (உதாரணம்:- சித்திரைத்திருவிழா- சித்தி - திரை - திருவிழா)
   1.
   2.
   3.
   4.

முடிவு திகதி: 28.02.2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி முடிவு -83
(கார்த்திகை-மார்கழி - 2014)

| | | | |
|---|---|---|---|
| ந | த் | தா | ர் |
| ல் | லி | ல் | வி |
| வ | ரை | த | ல் |
| ழி | டு | கா | கா |

# சிறுவர் குறுக்கெழுத்துப் போட்டி 84
(தை - மாசி - 2014)

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

இ – வ: –

01-04 இவர்களுக்கும் உலகில் ஒரு நாள் கொண்டாடப்படுகின்றது.

05-06 இருபத்தைந்து ஆண்டுகளாகப் புலம்பெயர் தேசத்தில் வெளிவரும் தமிழ்ச்சஞ்சிகை

வ – இ: –

12-11 இல்லம் ஒத்த சொல்.

15-13 நடு இரவில் சூரியன் தெரியும் நாடு.

கீ – மே: –

13-09 நமது ஊர் வீடுகளின் பாதுகாப்பு அரண்.

16-04 விடுதலைப் போரில் மடிந்த உத்தமர்கள்.

மே – கீ: –

02-14 இது இல்லாவிடின் உயிர் வாழமுடியாது

03-11 இனிப்பான பலகாரம்.

முடிவு திகதி: 28.02.2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் போட்டி முடிவுகள்
## (ஆடி - ஆவணி 2014)

பங்குகொண்டவர்களும் பரிசு பெறுபவர்களும்.

செல்வி. நந்தனா.கனகராசா - Monchengladbach
செல்வி. சாதனா.தேவானந்தராசா - Monchengladbach
செல்வி. மயூரி.பதஞ்சலி - Weeze
செல்வி. சாதனா.பதஞ்சலி - Weeze
செல்வி. ஆருஜா.விநாயகமூர்த்தி - Paderborn
செல்வி. அகவிழி.பிரபாகரன் - Lonon
செல்வி அபிராமி.பரமானந்தன் - Kevelear

செல்வன். அகவொளி.பிரபாகரன் - London
செல்வன். லயகரி.பதஞ்சலி - Weeze
செல்வன். ராகுல்.கனகராசா - Monchengladbach
செல்வன். கிருஜன்.விநாயகமூர்த்தி - Paderborn

பரிசுபெறும் அதிஸ்டசாலிகள்.

செல்வி. அகல்விழி.பிரபாகரன் - London
செல்வி. அபிராமி.பரமானந்தன் - Kevelear
செல்வன். லயகரி.பதஞ்சலி - Weeze

போட்டிகளில் கலந்துகொண்ட அனைத்து மாணவ மணிகளுக்கும் பாராட்டுக்களும்..வாழ்த்துக்களும்!..தொடர்ச்சியாக போட்டிகளில் பங்குகொள்ளுங்கள்!... பரிசுகளை வென்றிடுங்கள்!..

---

நன்றிகள்!..

மண் சஞ்சிகையின் அட்டைப்பட கணனி வடிவமைப்பு
செல்வன் பானுஸ்கந்தா-புவனேந்திரன்
Duisburg

மண் சஞ்சிகையின் கணனி வடிவமைப்பு
செல்வன் சிவகாந்த்-சிவராசா
Duisburg



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை (ஐரோப்பா)

( இலங்கைப் பாடத்திட்டத்திற்கு அமைய )

**Tamilischer Bildungsverein Deutschland e.V. ( Europa )**

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை"

---

## பொதுப் பரீட்சை - 2014 / 2015
## தமிழ்மொழி

யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை ஆண்டுதோறும் ஐரோப்பா தழுவிய முறையில் நடாத்தும் தமிழ்மொழிப் பொதுப் பரீட்சை, **எதிர்வரும் 2015ஆம் ஆண்டு மாசி மாதம் 21ஆம் (2015.02.21) திகதி நடைபெறவுள்ளது.** சகல மாணவர்களும் இப்பரீட்சையில் தோற்றித் தங்கள் திறமைகளை வெளிப்படுத்திச் சான்றிதழ்களையும், பரிசுகளையும் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். பாடசாலைப் பரீட்சார்த்திகளாயின், ஆசிரியரின் உதவியுடன் பாடசாலை மூலமும்; தனிப்பட்ட பரீட்சார்த்திகளாயின், பெற்றோரின் உதவியுடன் தனிப்பட்ட முறையிலும் விண்ணப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

பரீட்சைக்கான செலவுக் கட்டணமாக பாடசாலைப் பரீட்சார்த்திகள் 15 ஒயிறோவும் (15,-€); தனிப்பட்ட பரீட்சார்த்திகள் 20 ஒயிறோவும் (20,- €) அனுப்புதல் வேண்டும். பரீட்சைகள் ஆண்டு 2 தொடக்கம் ஆண்டு 13 வரையான வகுப்புகளுக்கு நடைபெறும். **விண்ணப்பங்கள் 2014.12.20ந் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.**

முகவரி:-

Tamilischer Bildungsverein Deutschland e.V.
Postfach 1646
59159 Kamen
Germany

பணம் அனுப்ப வேண்டிய வங்கி விபரம்:-

Tamilischer Bildungsverein Deutschland e.V.
Städtische Sparkasse UnnaKamen, Deutschland
IBAN: DE91 4435 0060 00 05053335
SWIFI-BIC: WELADED1UNN
Verwendungszweck: Prüfung

மேலதிக தொடர்புகட்கு:-

P. Srijeevaghan ( Vorsitzender )
Nordenmauer 17
59174 Kamen. Germany
Tel: 02307 / 299384 Fax: 02307 / 2612516

இணையத்தளம்: www.Kalvichsevai.com

இங்ஙனம்
யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பான வேண்டுகோள்!.

மண் சஞ்சசிகையில் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கும் சிறுவர் போட்டிகளான குறுக்கெழுத்துப்போட்டி, வினாவிடைப் போட்டி, கண்டுபிடியுங்கள் போட்டிகளில் பங்குபற்றும்மாணவர்களின் எண்ணிக்கைகுறைவடைந்துவருவதை வேதனையுடன் சுட்டிக்காட்டுகின்றோம் .மாணவமணிகளின்தாய்மொழிக் கல்வி,எழுத்தாற்றல், சிந்தனையாற்றல்,
அறிவியல் விடையங்களில் மேம்படவேண்டும் என மண்சஞ்சிகை பல ஆண்டுகளாக எடுத்துவரும் செயற்பாடுகளுக்கு நீங்கள் வழங்கிவரும் ஒத்துழைப்புக்கள் ஆதரவுகள் குறைவடைந்துவருவதால் இந்த மூன்று போட்டிகளையும் தொடர்ந்து நடத்துவதா!..என்னும்கேள்வி எழுந்துள்ளது. பங்குகொள்ளும˙ மாணவமணிகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதால் போட்டிகளை நிறுத்தவேண்டிய காலகட்டத்தில் உள்ளோம். எனவே அடுத்துவரும காலங்களில் போட்டிகளில்கலந்துகொள்ளும் மாணவ மணிகளின் எண்ணிக்கை குறித்து முடிவெடுக்கப்படும். ஆகவே பெற்றோர்களும் மாணவர்களும் ஆக்கமும் ஊக்கமும் எடுத்து ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்கிப் பயன்படும்வண்ணம் அன்போடு கேட்டுகொள்கின்றோம்!..

ஆசிரியர்

# வெள்ளி விழா!.

உங்கள் மண் சஞ்சிகை எதிர்வரும் 2015 தை மாதம் தனது 25வது ஆண்டை நிறைவுசெய்துள்ளது. வெள்ளிவிழாவை 2015 ஏப்ரல் மாதம் நடாத்த ஏற்பாடுகள் மேற்கெளாள்ளப்பட்டுள்ளன.வெள்ளி விழாவையொட்டி சிறுவர் இளையோர், வாசகர்களிடையேபல வகையான போட்டிகள் இம்மலரிலே வெளியாகியுள்ளன. போட்டிகளில் கலந்து கொள்ளுங்கள். தொடர்ந்து மண் சஞ்சிகையைப் படியுங்கள். இவ்விழா பற்றிய உங்கள் கருத்துக்களை அன்போடு எதிர்பார்க்கிறோம்!...

ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறளும் பொருளும்

## ஒழுக்கமுடைமை

131. ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

132. பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்
தேரினும் அஃதே துணை.

133. ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.

134. மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்.

135. அழுக்கா றுடையான்க ணாக்கப்போன் றில்லை
ஒழுக்க மிலான்க ணுயர்வு.

136. ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி.

137. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி.

138. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

139. ஒழுக்கம் உடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொல்.

140. உலகத்தோ டொட்ட வொழுக்கல் பலகற்றுங்
கல்லா ரறிவிலா தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறளும் பொருளும்

131. நன்னடத்தை பெருமை தருவதால், அந்நடத்தையை உயிரினும் மேலாகக் காப்பாற்ற வேண்டும்.

132. பகுத்தறிவுடன் ஆராய்ந்து பார்த்தால் ஒழுக்கமே வாழ்க்கைக்குத் துணையாகும். அதனைக் கெடாமல் துணிந்து காப்பாற்ற வேண்டும்.

133. நன்னடத்தை உடையவரே நற்குடி மக்கள். தன்னடத்தை கெட்டவர் இழிந்த பிறப்பினராவர்.

134. கற்ற கல்வியை மறந்தாலும் பின் கற்றுக்கொள்ளலாம், அந்தணன் ஆனாலும் ஒழுக்கம் கெட்டால், அவனது பெருமையும் கெடும்.

135. பொறாமை உள்ளவனிடம் செல்வம் இல்லாதது போல ஒழுக்கம் இல்லாதவனுக்கு உயர்வு இல்லை.

136. நன்னடத்தை தவறினால் குற்றம் உண்டாகும் என்பதை அறிந்த மனவலிமை உடையவர்கள் ஒழுக்கத்தில் இருந்து தவறமாட்டார்கள்.

137. ஒழுக்கத்தினால் எல்லோரும் மேன்மை அடைவர். ஒழுக்கம் தவறினால் தீராப் பழியை அடைவர்.

138. நன்னடத்தை பிறருக்கு உதவுவதற்கு முதன்மையாகும்., தீய நடத்தை எந்நாளும் துன்பத்தையே கொடுக்கும்.

139. மறந்தும் தீய சொற்களைத் தம் வாயால் சொல்லுதல் ஒழுக்கமுடைவர்களுக்கு முடியாதொன்றாகும்.

140. உலக நடப்பினோடு சேர்ந்து நடப்பதைக் கற்காதவர் பல கலைகளைக் கற்றவராயினும் அறிவற்றவரே ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களிப்பூட்டவந்த பொங்கல்!..

பொங்கல் திருநாள் வந்ததடி பொன்னம்மா
பூரிப்பெல்லாம் தந்ததடி கண்ணம்மா
எங்கும் நம்புகழ் ஓங்குதடி செல்லம்மா
உழவனுக்கு நன்றி சொல்வோமடி நல்லம்மா!..

உலகிற்குப் பெருமை சேர்க்கும் திருநாளடி-நல்
உணர்வை ஊட்டும் தமிழர் நல் நாளடி
கழனியில் விளைந்த நெல் கதிர்களடி
களிப்பைத் தந்து வாழ்த்துக்கூற வைத்ததடி!...

எத்தனையோ திருநாள் வந்திடினும் நமக்கு
இதுவே எழுச்சியைத் தந்திடும் திருநாளடி
சித்தனையும் முத்தனையும் சிலம்பாடத் தூண்டுமடி
இத்தனை சிறப்பும் பெற்று எழிலைக் காட்டுமடி!...

அத்தை மகன் அழகரசன் வந்து உனக்கு-பொன்
ஆரம் சூட்டி அழைப்பதிலே அகம் மகிழுமடி
நித்திரையிலும் இந்தச் சுகம் நிலை மாறாதடி
நெஞ்சத்திலே நித்தம் நித்தம் நினைவூட்டுமடி!...

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது உண்மையடி
தையலர்கள் மனம் மகிழும் திருநாளடி
கை வளையல்கள் ஓசை கேட்குமடி - அந்தக்
கலியாண நாள் இன்று களிப்பூட்ட வந்ததடி!...

பொ.இளவழகன்.
மலேசியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டே வருக!.

காசினி எங்கும் கருணை பெருக
மாசிலா வாழ்வில் மனங்கள் குளிர
ஏதிலி என்ற இனங்கள் அற்று
எங்கும் எதிலும் இன்பம் நிலைக்க
பூமித்தாயும் பூத்துக் காய்த்து
பொலிந்த வளங்கள் நிறைந்து செழிக்க
தேசங்கள் எங்கும் பேதமை மறந்து
நேசங் கொண்டு நித்திலம் வாழ
வருக வருக புத்தாண்டே
தருக நிறைவை விருந்தாக!...

# பொங்கலோ பொங்கல்!..

முற்றத்தில் கோலமிட்டு நாலுபக்கச்சதுரமிட்டு
மாவிலை தோரணமும் நட்டுவைத்த செங்கரும்பும்
மூன்றுகல் அடுப்பினிலே புத்தம் புதுப் பானையிட்டு
பாலோடு சக்கரையும் பச்சரிசி பசுநெய்யும்
பக்குவமாய் கலந்து பதமாகப் பொங்கிவர
பொங்கலோ பொங்கலென இன்பக் குரலெழுப்பி
ஆதவன் வருகையிலே அவனுக்காய்ப் படையலிடும்
நன்றிக்கு வித்தான நல்ல தமிழ்ப் பொங்கல்
என்றைக்கும் இனிக்கின்ற இனிய தைப்பொங்கல்
பகிர்ந்துண்ணும் பக்குவத்தை நவின்று நிற்கும்பொங்கல்
மறந்திடாது புலத்திலும் தொடர்ந்திடும் தைப்பொங்கல்
பானையின்றி முற்றமின்றி படைத்திடும் பொங்கல்
பாரினிற்கும் தமிழர் பக்குவத்தை பொங்கல்சொல்லும்
செல்வற்கும் வறியவற்கும் சொத்தான பொங்கல்
யாதிமத பேதமின்றி யாவற்கும் ஒன்றான பொங்கல்
நாமுமிங்கு பொங்கிடுவோம் பொங்கலோ பொங்கல்!


திருமதி கீத்தா பரமானந்தன்
ஜேர்மனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுத்துமாத்து....

சூரியனை சுத்திச் சுத்தி வந்து உலகம் சுத்துது
மனிதன் மட்டும் சுத்துமாத்து பண்ணியே சுத்தி வருகிறான்
வட்டமிட்டு பம்பரமும் சுத்தி வருது
வட்ட நிலா வானில் தினம் சுத்தி வருகுது
பூவைச் சுத்திச் சுத்தி வண்டு பறக்குது
தேனை உண்டு களித்த பின்னே மீண்டும் பறக்குது
மனிதன் காதல் என்று சொல்லி பெண்ணை சுத்துறான்
காமம் கண்ட பின்னே அவன் கதையை மாத்துறான்
கழுகு கூட சுத்திச் சுத்தி இரையை தேடுது
சில மனிதன் கூட கழுகு போலே சுத்தி வருகிறான்
ஒண்டை ஒண்டு சுத்தியே உலகம் இயங்குது
மனிதன் மட்டும் சுத்து மாத்துப் பண்ணியே சுத்தி வருகிறான்



கவி மீனா
ஜேர்மனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிடா !...

திருமதி கொங்காஸ்ரான்லி
ஜேர்மனி

ஆறறிவு படைத்த மனிதன்
அவனுக்குள்ளே இருக்கும் மிருகம்
ஏழறிவு என் செய்யும் இங்கே.
மிருகம் தன் சுயரூபம் காட்டினால்.

மனிதா மனிதா மானிடப்பிறப்பரியது.
கேளடா இதை செவிகொடுத்து,
புரியுதா இது எதற்கு,
புண்ணியம் தான் அதன் கருத்து.

நல்லவை செய்ய பிறந்த மானிடா,
நன்றியுடன் விசுவாசம் காட்டவேண்டும்,
தீயவை அவை களையவேண்டும்,
தீண்டாமை இங்கே விலக்கவேண்டும்.

செம்மொழி பேசும் மானிடா!
செய்மையுடன் இருக்க பழகு,
எம்மொழி மேன்மொழி தமிழ்,
இதையும் நீ உலகிற்கு உணர்த்து.

பாரினில் பரந்து வாழும் மானிடா!
செம்மையுடன் இருக்கப் பழகு,
எம்மொழி மேன்மொழி தமிழ்,
இதையும் நீ உலகிற்கு உணர்த்து.

பாரினில் பரந்து வாழும் மானிடா!
பார்த்து உலகில் நடக்கவேண்டும்,
வேரினில் விட்ட கிளை போல.
விளாசியே உலகில் பெருகவேண்டும்.

உள்ளமதில் நீ உண்மையாக நினைத்தால் மானிடா
உலகையே கையில் ஏந்தலாம்,
பள்ளத்திலே விழுந்து விடாது
உவகையிலே மிதந்திடலாம் நீ மானிடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விண்ணும் வயப்படும்!...

மொழியின் தேடலின் விரிவு
அருத்தமாகும்வழியும்
இன்பம்அமைதி வசமாகும்.எதுகை
மோனை சந்தம் சீரிலும்மதுகைப் பாவின்
வரிகள் வசப்படும்.இசைந்த தாளம்இனிய
குரலிலும்அசையும் இசை அரிதாய்
வசப்படும்.துள்ளி ஓடும் அருவி
தடைகளையும்தள்ளியுருட்டித் தன்
பாதையை வசப்படுத்தும்.கருணை
வசப்படும் தர்மமனதில்.கல்வி
வசப்படும் கூரிய மதியில்.காதல்
வசப்படும் அன்பு நெஞ்சில்.வாழ்வு
வசப்படும் எத்தனையோ வழியில்.
வீரிய முயற்சி கூரிய நோக்கில்
சீரிய கருத்து நேரிய நடையில்.
காரிருள் கலைய வானம்
வசப்படும்.பாரில் ஓரிடம்
தானே நிசப்படும்.அன்பு,
மரியாதை, அணைப்பு, உள்வாங்கல்
இன்ப உலகை இதமாய்
வசப்படுத்தும்.மகத்துவ மனிதம்
ஆறு அறிவானால்மகத்துவங்கள்
பலரிடம் வசப்படவில்லையே!
நின்று இளைப்பாற ஒருமனிதன்!சென்று
கரை சேர இன்னொருவன்ஊன்று
கோலாக மற்றொருவனாகில்என்றும்
எளிதில்வானம் வசப்படாது.

பா ஆக்கம்
பா வானதி வேதா. இலங்காதிலகம்.
டென்மார்க்.

## ஒருமுறையேனும்!...

விடியலின் திறவுகோல்
விதைகின்ற அறிவுகோல்
துடிக்கின்ற மனவலி
துடைத்திடும் துணிகரம்
எமக்குக் கீழேயுள்ளவரை
கோடியாய் உணர்ந்திடும்
தரத்தினை உணர்த்திட்ட தலைப்பு
ஒருமுறையேனும்
திரும்பியே பார்க்கின்ற
திகதிக்கு உரம்
வலுவிழந்த தோகையாய்
பொலிவிழந்த மரங்களாய் பூக்காத
புன்னகை உணர்ந்திட்ட தேசமாய்
கல்வியின் விளக்கின்றி எதிர்கால
இலக்கின்றி வாடிடும் உறவுகள்
வறுமையின் சுவடுகள் போக்கிட
வலியிது புகலிட நிலையேது
ஒருமுறையேனும் எண்ணத்தில்
மெழுகாய் ஏற்றிடும் விளக்காய்
கண்களை விழிப்போம் கரங்களை
இணைப்போம் நெஞ்சங்கள் மாறும்
நேர்மைகள் கிட்டும் தொலைந்திட்ட
முகவரி தொலையாது நிலைக்கும்
அசையாக் கல்லிலும்
கருணையாய் பிறக்கும்.

திருமதி. வசந்தா ஜெகதீசன்.
ஜேர்மனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிகை---

பத்திரிகை பற்பல பாகப்பிரிவு இது
உருவாக்கத்தில் முதலாய் உருவானது
நடப்புகள் பலதை நகல் எடுத்து
தன்னிடம் அடக்கும் தகுதி உண்டு
துறைகளின் துணைக்கு ஒர் ஏடு
தேடலின் தேவைக்கு பல கூறு
விளம்பரம் இதற்குள் தனியலகு
வேண்டிப் படிப்பது தன்னிறைவு
கூட்டுக் கூட்டாய் கோர்ப்பு
வைத்துக் கொண்டு வந்திடும்
பல தகவல் நாட்டு நடப்பும்
நல்லவையும் நாளைய நிகழ்வின்
அறிமுகமும் தரப்படும் செய்தியின்
பாகங்களேஊடகப் பிரிவில் ஒன்றிது
ஒன்றித்து வருகுது கணனிக்குள்ளே
பார்ப்பதில் பரவசம் பத்திரிகை
பலருக்குஇதுவேமுதன்மைப் பொழுதே!...

வேதிகா ஜெகநீசன்
ஜேர்மனி

# புது ஆண்டு......

ஆண்டுகள் பல ஓடினாலும் ஆனந்தம் மனதினுள்ளும்
தாண்டும் எண்ணங்கள் தந்திடும் தேடல்
தளராத தாகம்
முடியாதென முனைப்புக்கொள்ளாமல் முடியுமென
எண்ணின் விடியும் பொழுதுகள் விழுதுகளாகும்
கொடுக்கும் எண்ணம் கூடி வர வேண்டும்
கொள்கைகள் என்றும் வானைத் தொட வேண்டும்
கொடை கொடுத்து வாழ்ந்த இனம்
கோடி நன்மை பெறும்
தடையுடைத்து தளிர்நடை போடுவது
தளராத வெற்றி தரும்
கொடுக்கும் ஆண்டு படிக்கும் நூல்கள்
பயன்பெறத் தூண்டும்
பாதை தெரிந்து வாழ்ந்தால் பயணம்
வெகு தூரமில்லை
நடிக்கும் செயல்கள் நாளை விடை கொடுத்து
அனுப்பும்நயமாய் கொடுத்து வாழ்ந்தால்
கோடி நன்மை கிடைக்கும்

திருமதி. நகுலா சிவநாதன்
ஜேர்மனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளக்குமுறல்

அன்றொருநாள் பூமியில் பிறந்தேன்
அகிலத்தில் என்னை அன்னை
வாரியணைத்து முத்தமிட்டாள் - இந்தக்
கணத்தினை நான் வியந்தேன்

இன்று வளர்ந்து பெரிய
சவால்களை எதிர்கொள்கிறேன்
இருந்தும் ஊடுபத்திய விளக்கைப்போல்
எண்ணெய் இல்லை

நான் சாதிக்க நினைத்தவை பல
ஆனால் சாதித்தது ஒன்று சில
என்னுள் ஒரு விவேகத்தை கண்டேன்
அதனை வெளிக்காட்டச் சக்தியில்லை

இத்தகைய உள்ளம் தந்த இறைவன்
என் இதயத்தை மட்டும்
துன்பத்தின் நிழலாக்கியது ஏனோ?

செ. சரண்ஜா
வவுனியா – இலங்கை

## கொடுக்கும் ஆண்டு

மறுமுறை பூத்தது ஓர் ஆண்டு
மறுமுனை போக வைத்திடுமா இவ்வாண்டு?
மறுத்தது எல்லாம் இனி கை கூட
கிறுக்கல்கள் யாவும் இனி ஒன்று பட
என் வானகம் கண்டதொரு வானவில்லை
இவ்வுலகம் காணுமொரு காலமல்லவா?
இந்நாமம் அறிமுகமாகுமொரு நேரமல்லவா?
இலட்சியங்கள் பேசுமொரு நல்லாண்டல்லவோ?
கண்ணருகில் மனதருகில் இலக்குகள் இனிப் போதும்
கடினமாய் உழைத்த சோர்வு படிந்த காலங்கள் இனியே இனிப்பாகும்
பலருக்கு கொடுக்கையில் வெற்றிகள் உனதாகும்
கொடுக்கும் ஆண்டிதுவே துடிப்புகள் உரித்தாகும்

சி. ஷிறீகா - ஜேர்மனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலரட்டும் புதுவருடம்!...

ஆங்கிலப் புத்தாண்டாய் மலர்ந்திட்டாலும்
மனங்களில் இன்னும் விடைதெரியாக் கேள்விகளுடனே
கூடிக்குலாவி ஒன்றாய்ப் பிணைந்து வாழ்ந்தவர்கள்
வீடு வாசல் உடமைகள் அழிந்து தொலைந்தாலும்
விட்டுச் சென்ற உறவுகள் ஒன்றுகூடி
தேய வாழ்வை எம் மக்கள் அமைக்க
கரம்கோர்த்த மண்ணிலே கோடி மலர்கள் கொட்டும்
நாடு ஒன்றே என்றும் நாளாய்
இவ்வாண்டு பிறந்து விட்டதே!...

புத்தாண்டு ஒன்று பிறந்துவிட்டால்
புது யுகம் எல்லோருக்கும் உதிப்பதில்லை
பழையது கழிதலும் என்று நன்று மனதிலிருத்தி
புதிதாய் இன்ப வாழ்வு வாழ்வதற்கு
இதயத்தால் இணைகின்ற புத்தாண்டாய்
எப்போதும் காத்துவிட புது ஆண்டாய் மலரட்டுமே!...


திருமதிஜெயா நடேசன்.
ஜேர்மனி

## சிந்தனைத்துளிகள்....

1. நிகழ்கால சேமிப்பால் எதிர்காலம் மிளிரும்.
2. முயற்சியும் பயிற்சியும் உடலுக்கு ஆரோக்கியம்.
3. பழி கூற முந்தாதே...பாராட்டப் பின்வாங்காதே.
4. உண்மையும் தூய்மையும் வாழ்வுக்கு அழகு.
5. களைகளால் பயிர் நாசம் கவலைகளால் உயிர் நாசம்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




குங்குமத்தைக் குழைத்தெடுத்து குதூகலத்தை அதில்கலந்து
கோடானு கோடியுள்ளங்களில் குடியிருக்கும் மண்மலரும்
சங்கமமாய் இரட்டை வாழ்த்தை சகத்தினுக்கு வழங்கியதனால்
சந்தோஷம் பொங்கிப் பிரவாகித்து சலசலத்தபடியே நகர்கிறது..

மங்களம் பொங்கும்படி நத்தார்,புத்தாண்டு வாழ்த்துகளையுரைத்த
மண் சஞ்சிகைக்கு மனப்பூர்வமாய் நாம் நன்றிசெலுத்துவோம்
செந்தமிழ் மொழியோடு சிறந்த தமிழ் இலக்கியவாதிகளை
சீர்தூக்கிடும் சிறப்பினுக்கு சிரம்தாழ்த்தி வணக்கம்சொல்வோம்..!

வங்கக்கடலைத் தாண்டி வலம்வரும் குளிர்த் தென்றலாகவே
வாழுகின்ற தமிழர்களுக்கெல்லாம் வாழ்த்துரைத்த மண்மலரே
தங்குதடையேதுமின்றி இந்தத் தரணியெங்கும் நகர்ந்துசென்று
தாய்மொழியைத் தளிர்க்கவைத்தமைக்காய் தாழ்பணிகின்றோம்..!

எங்கினும்இனிமைபூத்திடவே இசையோடு இரட்டை வாழ்த்தினை
இதயத்திலிருந்துஇயம்பியஇதழலே-இரண்டாயித்து பதினைந்தில்
தங்கிடும் செல்வத்தோடு தளைத்திடும் மனிதம் நிலைத்திடவே
தரணிக்காய்உழைக்கின்றஉன்னைத்தமிழாலே வாழ்த்துகிறோம்..!

அம்பலவன்புவனேந்திரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலர்கள் தினம்!...

வண்ணவண்ணப் பூக்களெல்லாம் வரிசையாகப் பூத்திருக்கும்
வானவில்லும் வந்திறங்கி வரிவரியாய் புதுஜாலம் செய்யும்
கண்ணடிக்கும் உடுக்களெல்லாம் காலைவரைக் காத்திருக்கும்
காதலர்களின் வருகைபார்த்து கால்கடுக்கத் தவமியற்றும்-மது
உண்ணவந்த தேனீக்கள் தம் உறவுகளை தடுத்துநிறுத்தும்
உண்மைக் காதலர் தினமின்றென்று ஒருநாளில் விரதமிருக்கும்..

எண்ணிலடங்கா பட்சிகளொன்றாய் எண்திசையும் சிறகடிக்கும்
எழுதிவைத்திடா குறிப்புகளோடு இசைபாடிக் களித்திருக்கும்
விண்ணிலுள்ள மேகங்கெல்லாம் விழாக்கோலம் பூண்டிருக்கும்
வெண்பனியில்முகம் துடைத்து வீதியெங்கும் தோரணமாக்கும்-இம்
மண்ணிலுள்ள உயிர்களெல்லாம் மகிழ்ச்சியிலே மூழ்கிவிடும்
மாந்தர்களின் காதலர்தினமின்றென்று மானசீக வாழ்த்துரைக்கும்..

விண்ணில்நீந்தும் கோள்களெல்லாம் வேவுபார்த்துக்காத்திருக்கும்
வெள்ளையுள்ளக் காதலர்கள் வினாத்தொடுக்க விடையிறுக்கும்
கிண்ணத்தில் தேன்பருகிக் கிறங்கிநிற்கும் நிலையினையொத்து
கிழகிழப்பும் வழிந்தோடிட கெஞ்சலும் கொஞ்சலுமாக-மெல்ல
கண்சிமிட்டும் காதலாலே கனிந்து மலர்ந்த நாளிதுதானென்றே
காதலர்கள் கைகோர்த்துக் களிப்பில்மிதக்கும் நாளின்றாகும்..

எண்ணத்தை இறக்கிவைத்து இமைகளால் விழிகளைவருடியே
இருவரொருவராய்த் தம் இனியஇதயங்களை இடம்மாற்றிடவே
அண்ணார்ந்து பார்த்திடும் பூமியின் அழகான சிருஷ்டியெல்லாம்
அமுதத்தைச் சுரந்தபடி இந்தஅகிலத்தையே புதுப்பிக்கும்-புது
பண்ணிசைக்கும் கடலலைகளோ பால்சுரந்தே இனிப்பாக்கும்
பாரினிலே காதலர்தினம் இன்றென பறைசாற்றிக் கையசைக்கும்..

அம்பலவன்புவனேந்திரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணியதை எண்ணியபடி எழுதுகிறேன்...

ப. பசுபதிராசா-ஜேர்மனி

## இயக்குனர் சிகரம் கே.பாலச்சந்தர் ஒரு நோக்கு..

நூற்றாண்டு கண்ட இந்தியச் சினிமாவின் ஜாம்பவான்களில் ஒருவரும், தென்னிந்தியச் சினிமாவின் தந்தையும் இயக்குனர் சிகரமுமான திரு. கே பாலச்சந்தர் தனது 84வது வயதில் உடல்நலக்குறைவால் மயிலாப்பூரிலுள்ள தனியார் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பயனின்றி கடந்த 23-12-2014 அன்று இயற்கை எய்தினார். திரையுலகப் பிரமுகர்களாலும் மக்களாலும் கே.பி எனச் செல்லமாக, பெருமையோடு அழைக்கப்பட்ட இவர் 1930ம் ஆண்டு யூலை மாதம் 29ம் திகதி திருவாரூர் அருகேயுள்ள நல்லமாங்குடியில் பிறந்தார்.

கனவுத்தொழிற்சாலையான சினிமாவில் நிசங்களை உற்பத்தி செய்து இவர் நடாத்திய அற்புதங்களுக்கு இணை இன்னும் இல்லை என்பது மிகையில்லை. கிட்டத்தட்ட ஐம்பது ஆண்டுகள் எமக்காய் ஆக்கித்தந்த படைப்புலகப் பிரவாகத்தில் திரையுலகம்அதுவரைகொண்டிருந்த இலக்கணங்களை, மரபுகளை, கட்டமைப்புகளை உடைத்துச் சுய பரிசோதனை செய்த பிரமா. சமூகத்தில் ஆண்களையே பிரதானம் எனப் பிரமாதம் செய்ய ஆக்கப்படும் அனைத்திற்கும் பெண் என்பவள் வாசத்திற்குக் கிள்ளிப்போடும் கறிவேப்பிலைப் பங்களிப்பைத் தகர்த்திப் பெண்கள் தம்மை சமூக முழுப் பொருளாக்கி.. பாரதி சொல்வானே" பேசாப் பொருள் பற்றிப் பேச விளைந்தேன்" என்று. அதேபோல் குறிப்பாக பாரதியைப்போல் பெண்ணுக்குப் புது விதி எழுதிய புதுமைச் சித்தன் கே பி அவர்களே!..

நாடகங்கள் மீதே தீராத காதல் கொண்டு அதனையே தன் வாழ்வில் இனிய மக்கள் கலைச்சேவையாகக்கொண்டு வாழ்ந்தவர் இவர். ஆயினும் மக்கள் திலகம் நடித்த தெய்வத்தாய்: படத்தின் மூலம் கதை வசன கர்த்தாவாக திரைப் பிரவேசம் செய்து சினிமா என்னும் வெகுசன ஊடகத்தில் மாற்றம் தந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்த்தராக உருவெடுத்தார்.. கதாநாயகர்களையே பற்றிப் புகழ்பாடும் நமது இலக்கியங்கள் தொட்டுச் சினிமாக்கள்வரை என்பதை முறியடித்துப் பெண் என்பவளின் பங்களிப்பும் முக்கியம் என்பதை பெண் வாய்திறந்து பேசும் அவளின் இருப்பியலை வெளிப்படையாகப் பேச வைத்துப் பெண்களையே ஆச்சரியக்கடலில் ஆழ்த்திய சிந்தனைப் போராளி கே.பி அவர்கள்.

நீர்க்குமுழி தொடக்கம் பொய் என்ற திரைப்படம்வரை சுமார் நூற்றியொரு படங்களை இவர் இயக்கியிருந்தாலும் இவர் தயாரித்த, ஆதரித்த படங்களோடு சேர்த்து நூற்றி நாற்பது படங்கள் என நம்புகிறேன்.. திரையுலகில் அமரர் நடிகர் நாகேஷ் அவர்களுக்கும் கே.பி அவர்களுக்குமுள்ள கலைப்பிரியம் என்பது நாடகக்காலம் தொட்டே தொடங்கிவிட்டது. அமரர் நாகேஷ் அவர்களைத் திரையுலகம் வெறும் நகைச்சுவை நடிகன் என்னும் வடிவிலே அடங்கிவிட்டது. ஆனால் நாகேஷ் அவர்களின் நடிப்புத் திறமையினை உணர்ந்த திரு கே.பி அவர்கள் நாகேஷ் அவர்களுக்கு கதாநாயகன் அந்தஸ்த்து வழங்கித் தன் முதல் இயக்கமான நீர்க்குமுழியில் அறிமுகப்படுத்தி நடிகர் நாகேஷை யார் என அடையாளம் காட்டினார்.

சோகமும் நகைச்சுவையும் கலைக்கு இனியவலு என்பதை உலகிற்கு அறிமுகம் செய்தவர். உலக நகைச்சுவைப் பெருமகன் சார்லி சப்ளின் அவர்களையே நடிகர் நாகேஷின்மூலம் தமிழில் இனங்காட்டி, நாகேஷைப் பாராட்டிக் கூறும்போது "நாகேஷ் மூலம் நான் சிந்திக்கிறேன், என்மூலம் நாகேஷ் நடிக்கிறார்" என்றார். இன்னும் எதிர் நீச்சல், சர்வர்சுந்தரம் என நாகேஷின் நடிப்புப் பிரமாண்டத்தை நமக்கும் உலகிற்கும் தந்தவர் அவர். முடிந்தவரை நாகேஷைத் தன் படங்கள் அனைத்திலும் இணைத்துப் பெருமை சேர்த்தார். சண்டையும் சமாதானமும் கருத்து மோதல்களும், முரண்பாடுகளும் கலைஞர்களிடையே தோன்றும். ஒருவகை அன்பின் ஊடல் என்பதற்கு கே.பியும் நாகேசும் விதிவிலக்கில்லை.

குறிப்பாகத் தமிழ்த்திரையுலகம் என்பதைக்கூர்ந்து பார்த்தால் கே.பி அவர்களால் இனங்காட்டப்பட்ட கலைஞர்களின் கைகளிலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்று முழுதாக, விழுதாக திரையுலகம் உள்ளதைக் காணலாம். கொமர்சியலுக்கு ரஜனிகாந்த், கருத்துக்குக் கமலஹாசன், கருத்து நின்று நிலைக்கும் வில்லத்தனத்திற்கு பிரகாஷ்ராஜ், நாஸர், குணச்சித்திரப் பாத்திரங்களுக்கு வை.ஜி.மகேந்திரன், சரத்பாபு, நகைச் சுவைக்கு விவேக், சார்லி, எஸ்.வி.சேகர் என சினிமாவின் உயிர்த் துடிப்புக்கு எல்லாம் இவர்களின் சுவாசங்களால் இயங்கும் இயக்கமே. அதனால்தான் ரஜனிகாந்த் தன் இரங்கலுரையில் குறிப்பிடும்போது திரு கே.பி ஐயாவை இழந்து நிற்பது என்னை நான் இழந்து நிற்பதைப்போல் உணர்கின்றேன் என்றார்.

ஆணாதிக்க சமூகத்தில் அடக்குமுறை அத்தியாயங்களைக் கிழித்தெறிய வேண்டிய உரிமைப் போரில் பெண் கிளர்ந் தெழும்போது பெண்ணே முழுவதுமாகப் பாதிக்கப்படுகின்றாள் என்றுபெண்ணைப் பயமுறுத்தினாரா!.. அல்லது தட்டிக்கொடுத்தாரா!.. என்பனபற்றிய அவரது படைப்புக்கள் மீது காட்டமான விமர்சனங்களைச் செய்த பத்திரிகைகள் சஞ்சிகைகள், அறிஞர்கள், கலையார்வத்தினர் என்போர் கணக்கிலடங்கிலர். உண்மைதான். எனக்குக்கூட இவர் படங்களின் மீது ஒருவகையில் கசப்புணர்வுகள் வந்ததுண்டு. பெண்ணை இணையற்ற பாத்திரமாக, சமூக சீர்திருத்தங்களுக்கு உரிய வளாகக்காட்ட பாலியலைப் பெரும் ஆயுதமாகக்கொள்ளும் இவர் கண் நோக்கு பார்வையாளர்களுக்கு கசப்புணர்வுகளைத் தந்ததுண்டு. சிந்து பைரவி திரைப்படத்தில் திறமையுள்ள கதாநாயகனுக்கு இரண்டாவது மனைவியாகி பாலியலைப் பரிசளித்துவிட்டு வெறுங்கையோடு அநாதையாகப் போகும் பெண், நூல்வேலி திரைப்படத்தில் ஆசைப்பட்ட அடுத்த வீட்டுக்காரனோடு தகாத உறவை வைத்து தன்னை மாய்த்துக் கொள்ளும் அபலைப்பெண்ணாக, குடும்பத்திற்காகப் பெண்மையைச் சுட்டுவைக்கும் ஐந்தாம் தரப் பெண்ணாக, ஒரு காமுகனுக்காக, ரவுடிக்காக பிள்ளை பெற்றுக் கொடுத்துவிட்டு தன் காதலனுடன் சேரும் கதை வடிவங்கள் எப்படி ஆண் ஆதிக்கத்தை வீழ்த்தும் என்பது சாமான்யனுக்குத் தோன்றும் ஐயப்பாடுகள்தான்.

ஆனால் காட்சி அமைப்பிலும், கதையமைப்பிலும் கே.பியிடமுள்ள நுணுக்கங்கள் ஆச்சரியப்பட வைக்கும். உண்மையில் கே.பியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழ்ந்து சிந்தித்துக் கூர்ந்து
சகவனிப்போர்களுக்கே
விளங்கும். ஆண்களால்
பெண்களைப் பார்க்கக்கூடிய
ஒரே வடிவம் பாலியல்
வடிவமே என்ற சமூகத்தில் சீழ்
பிடித்துப்போன தூர் வார முடியாத
சமூகச்சாக்கடையில் அது தரும்
நாற்றத்தை அதைக்காட்டியே
அருவருக்கச் செய்த சிந்தனைப்
பகலவன் கே.பி அவர்களே.
இப்படிப் பெண்ணிடமுள்ள
ஏனைய தகமைகளை நாம்
ஆரோக்கியமாகப் பார்த்தால் பெண்
இல்லாமல் உலகம் அழிந்துவிடும்
ஆபத்தைத்தான் அவர்
ஆண்களுக்கு நினைவூட்டினார்.

ஆயினும் அவள் ஒரு
தொடர்கதை திரைப்படத்தில்
ஆணின் கதியை வெல்லவந்த
பெண்ணின் வீரியவிதை
என்பதை மறுப்பதற்கில்லை.
காதலைத்தவிர ஒரு இளைஞன்
கண்ணை விரித்துப் பார்க்க
வானமே எல்லையாகக்கிடக்கும்
சமூகக்கடமை அதிகம் என்பதை
காட்டிய வடிவம் எனக்கு எப்போதும்
பிடிக்கும்.. எமது சமூகத்தில்
பெண்ணை அடிமைப்படுத்தி
வைத்துவிட்டு அவள் வேதனை
விழுமியங்களுக்கு உணர்ச்சிக்
கோலங்களுக்காகப் புத்தியை
மட்டும் பெண்ணின் தலையில்
முள்கிரீடமாகக்கட்டி மற்றவர்களின்
உணர்ச்சிகளை நிறைவேற்றும்
இயந்திரம் என்ற மனோ
நிலையை தகர்த்து அவளுக்கும்
உணர்ச்சிகளும் விருப்பங்களும்
உண்டு. அவளும் உரிமையுள்ள
உணர்ச்சியுள்ள ஓர் உயிர்
என்பதற்கான பிரகடனங்களே
அவளின் சினிமாச் சித்திரங்கள்.

இந்தியாவின் மிகப்பெரிய
அரச கௌரவமான "தாதா
சாகிப்பால்கே" விருதை தென்
இந்தியப்படைப்பாளிகளின்
நடிப்புக்காக நடிகர் திலகமும்,
இயக்கத்திற்காக திரு.
கே.பி அவர்களும் பெற்றனர்.
இன்னும் பத்மஹீ, கலைமாமணி
விருதுகளையும், மாநில
விருதுகளையும் பெற்றாலும்
இவரின் சிந்தனைக்கு,
மாற்றத்திற்கான நோக்கத்தைப்
புரிந்துகொள்ளாத சமூகம் என்
பதில் அவருக்கும் வருத்தமுண்டு.
இவரின் இழப்பு பெரிய
வெற்றிடத்தை ஏற்படுத்திவிட்டதாகச்
சிலர் அறிக்கை விட்டாலும் அவர்
இல்லை என்றாலும் கே.பியின்
படைப்புக்களைப் பார்த்துப் பார்த்துக்
கற்றுக்கொள்ளக்கூடிய பல்கலைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழகம் அவர் என்பதில் அவரின் இழப்பு வெறும் உடல் இழப்பு மட்டுமே.

கலைகளிலேகூட வேற்றுமைகளை வித்தியாசங்களைப் பார்க்கும் தெளிவற்றவர்களுக்கு கே.பியின் செயற்பாடுகள் மெய்சிலிர்க்கச் செய்பவை. இவர் சினிமாக்களை விடுத்துச் சின்னத்திரையில் நாட்டம் கொண்டபோது இவரைக் கிண்டல் பண்ணியோர் அதிகம். ஆனால் அவர் மூடர்களது விமர்சனங்களுக்கு அப்பால் சென்று சினிமாவில் சொல்ல முடியாதவற்றை விரிவாகச் சொல்லவந்த நல்ல ஊடகமே சின்னத்திரை என்றார். ரெயில் சிநேகிதம் அவர்படைத்த பல சின்னத்திரைக்காவியங்களில் புதிது. பல உதவி இயக்குனர்களை இயக்குனராக்கி, பல நடிகைகளை உச்சத்தில் உலவச்செய்து எட்டுத்திசையும் இனிக்கும் சினிமாவை கமலஹாசன் என்னும் மாபெரும் கலைஞானியிடம் ஒப்படைத்து காலமெல்லாம் சினிமா என்னும் பொழுதுபோக்கு அம்சம் மாறுதலை, மக்கள் மனதில் தேறுதலை அளிக்க ஓயாது உழைத்த இந்தக்கலைப் பொக்கிஷம் என்றென்றும் யாரும் தொடமுடியாத சிகரமாவே இருக்கும் என்ற நம்பிக்கையோடு கலைத்தாயின் தவப்புதல்வனுக்கு நன்றி வணக்கம்கூறி அவரின் கலைப்படைப்பை என்றும் எங்கள்வரம் என வாழ்த்துவோம் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்!......

## எஸ். பொ. காலமானார்.

மூத்த எழுத்தாளரும் பல நூல்கள், நாவல்களை எழுதிப்புகழ் சேர்த்தவருமான எஸ்.பொ. என்று அழைக்கப்பட்ட எஸ் பொன்னுத்துரை அவர்கள் தனது 82வது வயதில் அவுஸ்திரேலியாவில் காலமானார். நல்லூரைப் பிறப்பிடமாகக்கொண்ட இவர் கடந்த 1990 தொடக்கம் அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து வந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இவர் பல நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள் எனத் தொடாராத பகுதிகளே இல்லை என்று கூறலாம். உலகப் பரப்பில் சிறந்ததொரு படைப்பாளியாகக் கருதப்பட்ட இவரின் மறைவு தமிழுலகத்துக்குப் பேரிழப்பாகக் கருதப்படுகின்றது. அன்னாரின் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவ டாக்டர் பட்டம்...

தமிழ் சினிமாவில் கடந்த பத்தாண்டுகளாக அதிக பாடல்கள் எழுதி முதலிடத்தில் உள்ள கவிஞர் நா.முத்துக்குமாருக்கு கௌரவ டாக்டர் பட்டம் அளிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு "தங்கமீன்கள்" படத்தில் இடம்பெற்ற ஆனந்த யாழை பாடலுக்காக நா.முத்துக்குமார் தேசிய விருது பெற்றது நினைவிருக்கலாம்.

தற்போது அமெரிக்க உலகத்தமிழ் பல்கலைகழகம் நா.முத்துக்குமார் அவர்களுக்கு டாக்டர் பட்டம் அளித்துக் கௌரவித்துள்ளது.

இந்த விழா தியாகராயநகரில் உள்ள சர்.பிட்டி.தியாகராயர் அரங்கத்தில் நடைபெற்றது. அமெரிக்க உலகத்தமிழ் பல்கலைக்கழகத்தின் தலைவர், முனைவர் திரு.செல்வின்குமார் அவர்கள் நா.முத்துக்குமார் அவர்களுக்கு டாக்டர் பட்டத்தை வழங்கி கௌரவித்தார்.

ஏற்கனவே 2006 ஆம் ஆண்டில் சென்னை பல்கலைக்கழகத்தில் தமிழ் பாடல்கள் குறித்து ஆய்வு செய்து நா.முத்துக்குமார் டாக்டர் பட்டம் பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எவர் நடு கடலுக்கு போனாலும்!...

கவி மீரா - ஜேர்மனி

ஊரிலை போய் தோட்ட
வேலையாச்சும் செய்தால்
கவலைகள் பறக்கும், மரங்கள்
பூப்பதும் காய்பதும் கண்டே மனம்
குளிரலாம் வயிறும் நிறையலாம்,
அதிகாலையில் ஆதவன்
வரவும் ,குயிலின் கூவலும்,
குருவிகளின் கீச் கீச் ஒலியும்
கேட்டு மகிழலாம், மலர்களின்
வாசமும் அரும்பு மலரும் அழகும்
கண்டு ரசிக்கலாம். மாலை நேரத்
தென்றலும், மயக்கம் தரும் அந்தி
பொழுதும் , ஆதவன் மறையும்
செந்நிறக் காட்சியும் கண்டு அகம்
குளிரலாம், இருள் கவ்வும்
நேரம் வானில் நிலா பால் ஒளி
வீசையில் எண்ணங்கள் சிறகடிக்க
பல மணி நேரம் விழி மூடாது
பார்த்து ரசிக்கலாம்.

அதையும் இளமை இருக்கும்
போதுதான் செய்யலாம்,
முதுமை வந்த பின் செய்ய
நினைத்தாலும் எதுவும் செய்ய
முடியாது, எதையெல்லாம் நாம்
தொலைத்து விட்டு இன்று நாய்
பேய் ஆக அலைகிறோம் மன
அமைதியின்றியே.
அன்னிய நாட்டிலை அமைதியை
தேட முடியாது, காசை தேடி
ஓடினவங்கள் காசை வைத்து
சந்தோசத்தை வாங்க முடியாது
அழவுறாங்கள்,கடவுளை
நினைக்காதவனுக்கு கடைசி வரை
நின்மதியில்லை,மனதை அலை
பாய விட்டவனுக்கும் வாழ்க்கை
இலவு காத்த கிளி போலே
கனவாகி போகிறது, என்னால்
எதுவும் முடியும், என் பணத்தாலே
எதையும் சாதிப்பன் என்று
எண்ணியவங்கள் கூட மண்ணில்
நிலைப்பதில்லை. சொந்த நாட்டில்
வாழும் போது வறுமையிருந்த
வீட்டில் கூட வாழ்க்கை
கசப்பதில்லை, அதை துறந்து
வெளி நாடு ஓடி வந்த மக்களுக்கு
மாடி வீட்டில் வாழும் போதும்
வாழ்க்கை கசக்கிறது.
அன்று அமைதியை தேடி
கோயில்கள் போவதும், விரதங்கள்
பிடிப்பதும், தியானம், தவம் என
மனதை ஒரு நிலை படுத்துவதும்,
மனிதர்களுக்கு எவ்வளவு
ஆறுதலை கொடுத்தது என்பதை
அறிந்தவர்கள் மிக குறைவு.

வெளி நாடு வந்த தமிழர்கள்
மன அமைதியை நாடி போகும்
பாதை வேறு ,மதுவுக்கும் ,போதை
மருந்துக்கும், மாதுவுக்கும்
அடிமைகளாகி சீர் கெட்டு
அலையுது அழியுது மிருகங்களாக
மாறி நமது சமுதாயம் இங்கே.
யாருக்கும் எது சொன்னாலும்
புரிவதில்லை யார் சொல்லும்
கேட்கப் பிடிப்பதில்லை,
பெரியவர்கள் காசேதான் கடவுள்
என்கிறார்கள், சிறுசுகளோ கண்
கண்டதே கோலம் எனது வாழ்க்கை
என்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரிலை வாழும் போது கஞ்சியோ,
கூழோ குடித்தாலும் இலை,
குழைகளை, மரக்கறிகளை
சமைத்து உண்டாலும் மூலிகை
வளம் நிறைந்த நாட்டிலே
ஆரோக்கியமாக வாழ்ந்த மக்கள்,
கடலோரம் வாழ்ந்ததாலே கடல்
உணவையும் உண்டதாலே இதய
நோயோ, பக்க வாதமோ அதிகம்
வராது நீண்ட ஆயுள் காலம்
நின்மதியாய் வாழ்ந்த சனம்,
வெளிநாட்டு வாழ்க்கையிலே
பறப்பவை ,நடப்பவை என ஆடு,
மாடு, பன்றி என்று எதையும் விட்டு
வைக்காமல் கண்டதெல்லாம்
உண்டு சொர்க்கம் என நினைத்து
வாழும் வாழ்க்கையிலே, உண்டி
பெருத்து, தொந்தி வைத்து பணம்
வங்கியிலே சேர்வது போல்
நோய்கள் உடலிலே சேர இள
வயதில் பலம் இழந்து, நாடி
தளர்ந்து, மனம் நொந்து அகால
மரணங்கள் காண்பதும் நிறைவாச்சு.

மனதினிலே நிறைவும் இல்லை,
முகத்தினிலே சிரிப்பும் இல்லை
மன நின்மதியை தேடி உறக்கமின்றி
தவிப்போரே உலகில் தற்போது
நிறைய காணக்கூடியதாக உள்ளது,
காரணம் என்ன
என்று சிந்தித்துப்பார்தால்
எல்லாவற்றுக்கும் அவனவன்
மனசேதான் காரணம் ஆகிறது.
மனசின் பேராசையும், பொறாமையும்,
பண வெறி, பதவி மோகம்
என்கின்ற தீராத வெறி கொண்டு
அதைத் தேடி அலைவதால்தான்
இத்தனை துன்பங்களும்
நிகழ்கிறது. இக்கரை மாட்டுக்கு
அக்கரை பச்சை என்பது போலே,
எங்கே போனாலும் அவனுக்கு
என்று எழதப்பட்ட விதியை
மாற்றவே முடியலை, ஒரு
சாண் வயிற்றுக்கு ஒரு வேளை
உணவுக்கு அலைகின்ற விதியாகிப்
போனதுதான் மிச்சம். நாய்க்கு நடு
கடலுக்குப் போனாலும் நக்குத்
தண்ணிதான்.

உயிர் தப்பி ஓடி வந்தவர் எல்லாம்
,இங்கு நூறு ஆண்டுகள்
வாழ்ந்ததும் இல்லை, மன
அமைதியை தேடி ஆகாயத்தில்
பறக்க நினைத்து நடக்க மறந்த
கதையாகி போனதுதான் உண்மை.

தம் வீட்டில் உள்ள ஊற்று நீரை
குடிக்க விரும்பாமல் ஏழு கடல்
தாண்டி போனதாலே கடல் நீர்தான்
குடிக்க முடிந்தது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கண்ட கனவுகள் யாவும் காற்றில் பறந்தன, இளமையும் இனிமையும் மறைந்தே போயின.
திரும்பிப் போய் சொந்த ஊரில் வாழவும் முடியாமல், வந்த ஊரிலும் மன நின்மதியோடு சுகமாக வாழ முடியாமல் திரிசங்கு சுவர்கம் போனது போலே அந்தரப் பட்ட சீவியம் ஆச்சு.அழிந்து போகும் மெய்யைக் கொண்டு, அலைந்து திரியும் மானிடரே எல்லாம் பொய் என்று எண்ணி மனதை அலைபாய விடாது காப்பதே மேல்....

அன்பே சிவம்!.

---

## தகவல்கள்: –

- உப்பு அதிகம் பாவிப்பவர்களில் நம்மவர்களும் முதன்மை வாய்ந்தவர்கள். உப்பு அதிகம் பாவிப்பதால் கடந்த வருடம் உலகில் 17 லட்சம் பேர் இறந்திருப்பதாக 187 நாடுகளில் எடுக்கப்பட்ட ஆய்வு ஒன்று குறிப்பிட்டுள்ளது. ஆகவே உப்புப் பிரியர்களே இனிமேலாவது உப்பை அளவாகப் பாவிப்பீர்களானால் உங்களுக்கு ஆயுளும் கெட்டியாகிவிடும்.

-உலகில் 40 விநாடிகளுக்கு ஒருவர் தற்கொலை செய்துகொள்கிறார் எனவும் 15 – 29 வயதினரே அதிகம்பேர் தற்கொலை செய்துகொள்கிறார்கள் எனவும் வறுமை நாடுகளிலேயே மிகக்கூடுதலானோர் தற்கொலை புரிந்துகொள்கிறார்கள் எனவும் உலக சுகாதார நிறுவனத்தின் ஆய்வு குறிப்பிட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மண்' சஞ்சிகையின் 25வது ஆண்டு நிறைவு
## சிறுவர் இளையோர் போட்டிகள் - 2015

1990ம் ஆண்டு தை மாதம் ஆரம்பிக்கப்பட்ட மண் சஞ்சிகை 2015ம் ஆண்டு தை மாதம் 25வது ஆண்டை நிறைவு செய்கின்றது. மிக்க மகிழ்வு. இந்த வெள்ளி விழாவையொட்டிப் புலம்பெயர்ந்து வாழும் சிறுவர்கள், இளையோர்களிடையே பல போட்டிகளை நடாத்த இருக்கின்றோம். எனவே போட்டிகளில் கலந்துகொண்டு ,பரிசுகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.......

(A) 6 வயதுவரை: -

(01-01-2009 தேதிக்குப் பின் பிறந்தவர்கள்)

ஓவியப்போட்டி:-

அனுப்பி வைக்கப்பட்டிருக்கும் படத்திற்கு அழகாக வர்ணம்தீட்டி எமது முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

(B) 7 - 9 வயதுப்பிரிவு: -

(31.12.2008--01.01.2006 உட்பட்ட திகதியில் பிறந்தவர்கள்)

(1) ஓவியப்போட்டி:-

அனுப்பி வைக்கப்பட்டிருக்கும் படத்திற்கு அழகாக வர்ணம் தீட்டி எமது முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

(2) உறுப்பெழுத்துப் போட்டி:-

நீங்கள் விரும்பிய தமிழ்ப்பாடல் ஒன்றைப் 10 -1 2 வரிகளுக்குள் அழகுற எழுதி எமது முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

(C) 10 - 12 வயதுப்பிரிவு: -

(31.12.2005--01.01.2003 உட்பட்ட திகதியில் பிறந்தவர்கள்)

(1) ஓவியப்போட்டி:-

நீங்கள் விரும்பிய மிருகம், பறவை, மலர் அல்லது உங்களுக்குப் பிடித்த ஏதாவது ஒரு படத்தை வரைந்து வர்ணம் தீட்டி அனுப்புதல் வேண்டும் (DIN A4 தாளில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) உறுப்பெழுத்துப்போட்டி:-
நீங்கள் விரும்பிய ஐந்து திருக்குறள்களையும் அதன் விளக்கத்தையும் அழகாக எழுதி அனுப்புதல் வேண்டும்.

(D) 13 -15 வயதுப்பிரிவு: -
(31.12.2002--01.01.2000 உட்பட்ட திகதியில் பிறந்தவர்கள்)
(1) ஓவியப்போட்டி:-
உங்களுக்குப்பிடித்த அல்லது கற்பனைக்கு எட்டிய ஏதாவது ஒரு படத்தை வரைந்து வர்ணம் தீட்டி அனுப்புதல் வேண்டும். (DIN A4 தாளில்)
(2) கட்டுரைப் போட்டி :-
தமிழ்மொழி, நான் விரும்பும் தொழில், திருக்குறள், தாய்த்திருநாடு இத்தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவுசெய்து DIN A4 தாளில் இரு பக்கத்தில் அழகாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
(3) கவிதைப்போட்டி:-
நீங்கள் விரும்பிய தலைப்பில் 10 -15 வரிகளுக்குஅமைவாக எழுதி அனுப்புதல் வேண்டும்.

(E) 16 - 18 வயதுப்பிரிவு.-
(31.12.1999--01.01.1997 உட்பட்ட திகதியில் பிறந்தவர்கள்)
(1) ஓவியப்போட்டி.-
உங்களுக்குப்பிடித்த அல்லது உங்கள் கற்பனைக்கு எட்டிய ஏதாவது ஒரு படத்தை வரைந்து வர்ணம் தீட்டி அனுப்புதல் வேண்டும். (DIN A4 தாளில்)
(2) கட்டுரைப்போட்டி:-
கணனியுகம், புலம்பெயர் தமிழ் மாணவர்கள், திருக்குறளின் சிறப்பு, தனிநாயகம் அடிகளார், தாய்நாட்டின் துயர் துடைப்போம் இத்தலைப்புக்களில் ஏதாவது ஒன்றைத் தெரிவுசெய்து DIN A4 தாளில் இரண்டு பக்கங்களில் எழுதி ஆனுப்புதல் வேண்டும்.
(3) கவிதைப்போட்டி:-
நீங்கள் விரும்பிய தலைப்பில் 15 - 20 வரிகளுக்கு அமைவாக எழுதி அனுப்புதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(F) 19 - 21 வயதுப்பிரிவு:-

(31.12.1996 -- 01.01.1994 உட்பட்ட திகதியில் பிறந்தவர்கள்)

(1) ஓவியப்போட்டி.-

உங்களுக்குப்பிடித்த அல்லது உங்கள் கற்பனைக்கு எட்டிய ஏதாவது ஒரு படத்தை வரைந்து வர்ணம் தீட்டி அனுப்புதல் வேண்டும். (DIN A4 தாளில்)

(2) கட்டுரைப்போட்டி.-

கணனியுகம், தனிநாயகம் அடிகளார், திருக்குறளின்சிறப்பு, புலம்பெயர் தமிழ் மாணவர்களும் தாயக மாணவர்களும், பெற்றோரும் இளவயதினரும் ஏதாவது ஒரு தலைப்பில் DIN A4 தாளில் மூன்று பக்கங்களில் எழுதி அனுப்புதல் வேண்டும்.

(3) கவிதைப்போட்டி.-

நீங்கள் விரும்பிய தலைப்பில் 15 - 20 வரிகளுக்கு அமைவாக எழுதி அனுப்புதல் வேண்டும்.

சிறுவர், இளையோருக்கான பொதுவிதிகள்:-

- போட்டிகள் முற்றிலும் இலவசமானது.
- வயது எல்லை(31.12.2014ல்) சரியாகக் கடைப்பிடித்தல் வேண்டும்.
- ஓவியப்போட்டியில் பங்குபற்றுபவர்கள் ஒருவர் ஒரு படத்தை மட்டும் வரைந்து வர்ணம் தீட்டி ஆனுப்புதல் வேண்டும்.
- அனைத்துப் பிரிவு ஓவியங்களும் DIN A4 தாளில் மட்டும் வரையப்படுதல் வேண்டும்.
- எழுத்துப்போட்டிகளில் கலந்துகொள்பவர்கள் அனைவரும் வெள்ளைத்தாளில் கறுப்பு மைப்பேனாவினால் எழுதுதல் வேண்டும். (சிறப்புமலரில் அப்படியே பதிவாகுவதற்கு)
- கோடுகள் போடப்பட்ட தாள்களில் எழுதுதல் தவிர்க்கப்பட்டுள்ளது.
- சிறுவர்கள், இளையோரின் எழுத்தாற்றல்களை மேம்படுத்துவதற்காக கவிதை, கட்டுரை, உறுப்பெழுத்துப்போட்டி அனைத்தும் கையால் எழுதுதல் வேண்டும். கணனியில் பதிவுசெய்து அனுப்புபவர்களின் ஆக்கங்கள் தவிர்க்கப்படும்.
- இன, மத, நிற, மொழி, நாடு, கட்சி, இயக்கம், அரசியல் வேறுபாடுகளைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.
- நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதும் முடிவானதுமாகும். வெற்றியாளர்களுக்குச் சிறந்த பரிசுகள் வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மண்'சஞ்சிகையின் 25வது ஆண்டு நிறைவு வாசகர் போட்டிகள் - 2015

1990ம் ஆண்டு தை மாதம் ஆரம்பிக்கப்பட்ட மண் சஞ்சிகை 2015 தை மாதம் 25வது ஆண்டுகளை நிறைவுசெய்து வெள்ளிவிழாவைக் கொண்டாடவுள்ளது. இந்த வெள்ளிவிழாவையொட்டி புலம்பெயர்வாழ் வாசகர்கள், எழுத்தாளர்கள், ஆக்கதாரர்கள், படைப்பாளிகளிடையே கவிதை, கட்டுரை, சிறுகதைப் போட்டிகளை நடாத்தவுள்ளோம். ஆர்வமுள்ளவர்கள் பங்குகொண்டு பரிசுகளை வென்றிடுங்கள்...

1. **கவிதைப்போட்டி:-**
   நீங்கள் விரும்பிய தலைப்பில் 30 - 40 வரிகளுக்குள் அமைதல் வேண்டும்.

2. **சிறுகதைப்போட்டி:-**
   விரும்பிய தலைப்பில் எழுதலாம் DIN A4 தாளில் நான்கு பக்கங்களுக்குள் கணனியில் பதிவுசெய்து அனுப்புதல் வேண்டும் (எழுத்துருபு - பாமினி எழுத்து அளவு 14)

3. **கட்டுரைப்போட்டி:-**
   (1) தமிழர்விடுதலைப்போராட்டம் (2) தமிழ்த்தூதர் தனிநாயகம் அடிகளார்
   (3) திருக்குறளும் வாழ்வியலும் (4) புலம்பெயர் வாழ்வியல்
   (5) கணனி உலகம் (6) தமிழ்ப்பெண்களின் இன்றையநிலை
   (7) ஊடகங்களின்பங்கு (8) மண் சஞ்சிகையின் 25 ஆண்டுகள்

ஏதாவது ஒரு தலைப்பைத் தெரிவுசெய்து DIN A4 தாளில் நான்கு பக்கங்களுக்குள் கணனியில் பதிவுசெய்து அனுப்புதல் வேண்டும். (எழுத்துருபு- பாமினி எழுத்து அளவு 14)

பொதுவிதிகள்: –

வயதுவேறுபாடு இல்லை. போட்டிகள் இலவசமானது, போட்டிகளுக்கு எழுதும் தாள்களில் உங்கள் பெயர், முகவரிகளைத் தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். இன, மத, நிற, மொழி, நாடு, இயக்கம், அரசியல் வேறுபாடுகளை தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். முடிவுத்திகதி: 28.02.2015

தொடர்பு முகவரி:- V.Sivarajah, AmWindhövel 18a, 47249 Duisburg
Germany. E.mail v.sivarajah@arcor.de



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணின் வெள்ளிவிழா!......

1990 ம்ஆண்டு தை மாதம் ஆரம்பிக்கப்பட்ட மண் சஞ்சிகை 2015 தை மாதம் 25வது ஆண்டை நிறைவுசெய்துள்ளது என்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறோம். இந்த நாட்டின் காலநிலையைக் கருத்திற்கொண்டு வெள்ளிவிழா நிகழ்வுகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் டியூஸ்பேர்க் நகரில் சிறப்பாக நடைபெறவுள்ளது என்பதை அறியத்தருகிறோம்.

சிறுவர்களே..இளையோர்களே!..

-வெள்ளிவிழாப் போட்டிகள் ஏற்கனவே மண் மலரில் வெளிவந்தன. அப்போட்டிகளின் முடிவுதிகதி 28-02-2015ம் தேதிக்குப் பின்போடப்பட்டுள்ளதால் தவறவிட்ட போட்டியாளர்கள் பங்குகொள்ளலாம்.

-25வது ஆண்டு நிறைவு சிறுவர் சிறப்பு மலர் ஒன்று வெளிவரவுள்ளதால் இம்மலருக்கு உங்கள் வாழ்த்துக்களை எதிர்பார்க்கிறோம்.

-நடைபெறவிருக்கும் கலைவிழாவில் உங்கள் திறமைகளையும் வெளிக்கொண்டுவரலாம். ஏதாவது கலைநிகழ்வுகளை மேடையேற்ற வரும்பும் சிறுவர், இளையோர். நீங்கள் தரவிரும்பும் நிகழ்ச்சியானது 5 - 7 நிமிடங்களுக்குட்பட்டிருத்தல் வேண்டும் (நடனம், பரதம், பாட்டு, ஆடல், பேச்சு, கவி என வேறு ஏதாவது.) 31-03-2015ம் தேதிக்கு முன்னர் தங்கள் விண்ணப்பத்தை அனுப்பி வைத்தல் வேண்டும்.

பெரியோர்கள்!..

-வாசகர்களுக்கான கட்டுரை, சிறுகதை, கவிதைப் போட்டிகளின் முடிவுதிகதி 28-02-2015 ஆகும்.

-கலை நிகழ்ச்சிகளை மேடையேற்ற விரும்பும் மண்ணின் எழுத்தாளர்கள், ஆக்கதாரர்கள், நலன்விரும்பிகள் தரவிரும்பும் கலை நிகழ்ச்சிகள் பற்றி 5-7நிமிடங்களுக்குட்பட்டு அமைதல் வேண்டும். நாடகம், கவியரங்கு, கருத்தாடுகளம், பேச்சு போன்றவற்றில் பங்குகொள்ள விரும்புபவர்கள் 31-03-2015ம் தேதிக்கு முன்னர் தங்கள் விண்ணப்பத்தை அனுப்பி வைத்தல் வேண்டும்.

ஆகவே அனைத்து வாசகர்கள், நலன்விரும்பிகள் யாவரும் இவ்விடையங்களைக் கருத்திற்கொண்டு, ஆக்கமும் ஊக்கமும் தந்து பயனடையும் வண்ணம் அன்போடு கேட்டுக்கொள்கிறோம்!.. -ஆசிரியர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலையில் ஆடும் ஓடம்..

(சிறுகதை)

திருமதிகெங்கா ஸ்ரான்ல ஜேர்மனி

அழகான அவளது வதனம் ,அழகிய புன்னகை ,முத்துப்போல பற்கள்.கன்னத்தில் விழும் குழி,உள்ளத்தை கொள்ளைகொள்ளும் அழகு ,அவள் பெயரோ உமா . ஆமாம் அந்த வகுப்பறையில் அவள்தான் பேரழகி . அது மட்டுமல்ல பாடுவதில் குயில் , ஆடுவதில் மயில் எல்லோரிடமும் பிரியமாக பேசுவதிலும் , பழகுவதிலும் எளிதில் பெற்றிடுவார் அன்பை பத்தாம் வகுப்பில் படிக்கும்போது உமா பதினாறு வயது பருவ மங்கை .பல உள்ளங்களை கொள்ளை கொண்டாலும் அவள் மனம் ஒருத்தரையும் விரும்பவில்லை. சிட்டு குருவியாக பட்டாம் பூச்சியாக பறந்து வட்டமடிக்கும் பதினாறு வயசு சிட்டுக்குருவி . இப்படி இருந்த உமா இன்று எப்படி மாறிவிட்டாள். அழகிய கன்னங்கள் ஒடுங்கி ,அழகிய பற்கள் விழுந்து, இந்த இள வயதில் அழகு கலைந்த கோலத்தில் அவள் . பார்ப்பவர்கள் ஏங்கிவிடுவார்கள். இவளா என்று .ஏன் இப்படி நடந்தது. என்ன ஆச்சு இவளுக்கு . அன்று ஏதேச்சையாக கண்ட அவளது பள்ளித்தோழி உமாவை அடையாளம் கண்டுகொள்ளவில்லை. உமாதான் அவளை அடையாளம் கண்டு பெயர் சொல்லி அழைத்தாள். அத்தோழி வெளிநாட்டிலிருந்து வந்தமையால் , வாளிப்பாக மெருகுடன் இருந்தாள் .அதனால் அவள் உமாவை ஒரு பிச்சைக்காரி என்று நினைத்தாள்.பின்னர் பெயர் சொல்லி அழைத்ததும் , நீ யார் என்று கேட்க . நான் தான் உம்முடன் படித்த உமா. தெரியவில்லையா? என ,ஐயோ நீர் உமாவா என்னால் நம்ப முடியவில்லையே! என்ன உமது கோலம் . இப்படி மாறிவிட்டீரே என அங்கலாய்த்தாள். அதற்கு உமா அழுத விழிகளுடன் தனது சோகக்கதையை தொடர்ந்தாள்

நான் 10 ம் வகுப்பு படித்துக்கொண்டிருக்கையில் , ஒரு நாள் குட்டை பாவாடை அணிந்து சென்றேன் . எங்கள் தமிழ் ஆசிரியை என்னை வீட்டிற்கு அனுப்பி என்னை உடுப்பு மாற்றி வரும்படி அனுப்பிவிட்டார். நானும் வீடு சென்று உடைமாற்றிவிட்டு இடைவேளைக்கு பின்பு பாடசாலைக்கு சென்றேன் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கதை எப்படியோ எனது தந்தைக்கு தெரிந்துவிட்டது. அவர் சரியான கோபக்காரர். தன்மானம் மிகுந்தவர்.என்னை ஏசி அடித்துவிட்டார். அவருக்கு அது பிடிக்கவில்லை . அதன் பிறகு அந்தத் தமிழ் ஆசிரியை ஒரே ஏச்சும் பேச்சும் தான். இருந்தும் நான் ஒழுங்காகப் பாடசாலை சென்று படித்துவந்தேன்.

இந்நிலையில் ஒரு நாள் என் வகுப்பு மாணவி, என்னிடம் வந்து, உமா, உன்னால் எனக்கு ஒரு காரியம் ஆகவேண்டும் செய்வீரா என்று கேட்டாள். சரி முடிந்தால் செய்கிறேன் என்று கூறி என்ன உதவி என்று கேட்க காதலுக்கு தூது போக உதவி செய்யச்சொல்லி கேட்டாள். அவள் ஒரு கடிதத்தை தந்து அதை தனது காதலனிடம் கொடுக்கச் சொன்னாள்

நானும் சரி என்று சொல்லி அக்கடிதத்தை வாங்கி தமிழ் புத்தகத்திற்குள் வைத்துவிட்டேன் ஆங்கிலப் பாடத்திற்குப் போகும்போது கொடுக்கலாம் என. அனால் எனது கஷ்ட காலம் அடுத்த பாடம் தமிழ். புத்தகத்தை எடுக்கும்போது கடிதம் கீழே விழ ஆசிரியை கண்டுவிட்டு என்னை கூப்பிட்டு எடுத்த கடிதத்தை அவர் வாசித்துவிட்டு ,எனக்கு நல்ல பேச்சு.என்னை பேசவே விடவில்லை. முன்னையகாலம் காதல் என்றால் என்ன, கடிதம் எழுதுவது என்றால் என்ன கொலை செய்வது போல பெரிய குற்றம். யாரும் தப்ப முடியாது.எத்தனை பேர் பாடசாலையால் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட்டுள்ளார்கள்.

இன்றைய இன்ரநெட் காதல் போல ஈசியான காதல் அல்ல அந்தக் காலக் காதல்.

தமிழ் ஆசிரியை கடிதத்தை வைத்துக்கொண்டு அடுத்தநாள் தந்தையைக்கூட்டி வரும்படி சொல்லி , தலைமையாசிரியரிடமும் புகார் கொடுத்துவிட்டார்.

அடுத்த நாள் தந்தை வந்தார் பாடசாலைக்கு, விசாரணை நடந்தது. நான் கடிதம் எழுதவில்லை எனக் கூறினேன். ஆசிரியை நம்பவில்லை.எழுதியவள் பாடசாலை வரவில்லை.

சாட்சிக்கு யாருமில்லை. இதற்கு அவமானப்பட்டது நான். என்னால் அப்போது ஒன்றும் செய்ய முடியவில்லை.வீட்டிற்கு வந்ததும் எனது தந்தை என்னை அடித்து , ஏச்சும் பேச்சும் தான். அத்தோடு விடவில்லை தனது குடும்ப மானம் போச்சுது, உன்னை படிக்க அனுப்பினால் காதலா செய்கிறாய் , மற்ற பிள்ளைகளை நான் என்ன செய்வது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி எனக்கு அவமானம் தேடித்தந்த நீ இனி பாடசாலை போகக்கூடாது என மறித்துவிட்டார். நானும் எவ்வளவோ சொல்லியும் ஒன்றும் எடுபடவில்லை, எனது கெஞ்சல், எனது கண்ணீர் தந்தையின் மனதை கரைக்கவில்லை. முடிவில் எங்கள் உறவுக்குள் ஒரு பையனைப் பார்த்து திருமணம் செய்துவைத்தார்.

எனக்கும் சிறிய வயது பருவக்கோளாறோ தெரியவில்லை. அவருடன் சேர்ந்து வாழ வன்னிக்கு சென்றோம், வாழ்வில் வசந்தம் கொஞ்சநாள்,இரு பிள்ளைகளுக்கு தாய், ஆரம்பம் நன்றாக இருந்தது.மனம் கொஞ்சம் ஆறுதலாக இருந்தது. நாட்கள் செல்ல கட்டினவனுக்கு கசப்பு வந்துவிட்டது. எனது அழகு குறைய எடுத்தெறியும் பேச்சு, எனது தந்தையை குறை சொல்வது, இப்படியே அன்று தொடக்கம் அடியும் பேச்சும் தான்.அப்போ நினைத்தேன் அழகான பெண்களின் வாழ்க்கை இப்படியா? உள்ளத்தால் கசக்கி பிழியப்பட்டேன். உடலால் வேதனை , அடி, நலிந்துவிட்டேன். அதில் பறந்தது தான் எனது அழகிய பற்கள் வேதனையிலும் அவளது உதடு புன்னகைத்தது பல்லில்லாமல் ,கண்களில் கண்ணீர் பெருகியது.

இப்போ வாழ்க்கை ஏதோ போகின்றது. எனது தந்தையும் உயிருடன் இல்லை. இருந்திருந்தால் கவலைப்பட்டிருப்பாரோ இந்த பிள்ளையின் வாழ்க்கை இப்படி ஆயிற்றே என்று. அன்று அந்த கடிதம் கதை இல்லையென்றால் நானும் படித்து ஒரு நல்ல நிலைக்கு வந்திருக்கலாம் . ஒரு நல்ல வாழ்க்கை அமைந்திருக்கலாமோ என என்னுவேன். எல்லாம் எனது விதியோ? என எண்ணத்தோன்றும். அப்போ கடிதம் எழுதிய மாணவியின் கதி என்னாயிற்று என்று தோழி கேட்க,அவள் காதலித்தவனையே மணந்து மகிழ்ச்சியாக இருக்கிறாள். அன்பாக இருக்கிறாள். ஆனால் நான் எனது வாழ்க்கை ? எனக்கு ஆறாத துயரம் அந்த நேரம் அந்த ஆசிரியை செய்த காரியத்தால் எனது தந்தை அவமானம் எனக் கருதியதால் எனது வாழ்க்கை, துடுப்பில்லாத ஓடமாக ஊசலாடிக்கொண்டிருக்கின்றது. என்ன செய்வது பிள்ளைகளுக்காக உயிர் வாழ்கிறேன் . இது தான் எனது கதை.இதற்குள்ளும் இன்னும் சோகங்கள் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறவில்லை. அறியாமையாலும் , அறிவு குறைந்தாலும் , தீர்க்கமற்ற விசாரணையாலும் தேவதை ஒருத்தியின் வாழ்வு தீயிலிட்டு பொசுக்கப்பட்டது. கேட்டவரின் கண்களில் குருதி வழிந்தது.இருந்தும் உமா சிறு புன்முறுவலுடன் எப்படி உங்கள் வெளிநாட்டு வாழ்க்கை என்று கேட்டாள். ஓ எங்களுக்கென்ன குறை . வேலை , கார், வீடு வசதி ,வாய்ப்பு. கவலையற்ற வாழ்க்கை. ஆனால் நித்திரை கொள்ள சாப்பிட நேரமில்லை. காசு தேட நேரம் போவதால் மற்றதற்கு நேரமில்லை என்று கூறிவிட்டு உமாவின் கையில் ஒரு 100 டொலர் கொடுத்துவிட்டு, உம்மை அந்த ஆண்டவர் தான் காப்பாற்ற வேண்டும். உமா உமது பிள்ளைகளை அனுசரித்து ,அவர்கள் விருப்பு , வெறுப்புகளை பார்த்து , கேட்டு நடக்கவேண்டும் உமக்கு ஏற்பட்ட நிலை உமது பிள்ளைகளுக்கு ஏற்படக்கூடாது. இதோ எனது விலாசம் தேவையென்றால் ,கேட்டால், முடிந்தால் உதவி செய்வேன் என்று விடைபெற்றாள். உமாவும் அன்புடன் கட்டித்தழுவி விடைபெற்றாள்.பட்டாம் பூச்சிகளாக் இருக்கும்போது எதுவும் தெரிவதில்லை, பாசம் என்னும் நேசத்தால் பகுத்தறிவும் பயன்படவில்லை, கொள்கைகள் மூடக்கொள்கைகளால், பலரது வாழ்வு பாழாகின்றது .இனியாவது உணர்ந்து திருந்தி, வெளியில் வரவேண்டும்.ஆனால் இன்றைய உலகம் அப்படியில்லை.எச்சங்கள் போட்டாலும், துச்சங்களாக மிதித்து மச்சங்களாக மாற்றி விடுவர்.எனவே அச்சங்கொள்ளாது அறிவுடன் சிந்தித்துப் பொருள் புரிந்து செயலாற்றினால் வெற்றிகொள்ளலாம்.உமாவின் வாழ்க்கை போல அலை அடிக்கும் ஓடமாக சிதறக்கூடாது. எதிர் நீச்சல் போட்டு வெற்றி கொள்ள வேண்டும்.

## சாம, பேத, தான,, தண்டம்!..

அதாவது மனம் இணங்கி அமைதி வழியில் கிடைப்பது சாமம்.
மனம்மாறித் தருவது என்ற வகையில் பெறுவது பேதம்.
பிச்சை அல்லது தருவதைப் பெறுவது தானம்.
அடித்துப் பறித்து எடுப்பது தண்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரதநாட்டியம் !... (சென்றஇதழ் தொடர்ச்சி)

## 14) கத்தரி அடவு -1

திருமதி.சாந்தினி துரையரங்கன்
ஜேர்மனி.

ஒரு அடவு மட்டும் உண்டு.
பயன்படுத்தப்படும் முத்திரை கத்தரிமுகம்.
இதன் சொற்கட்டு -தகதிமி
ஆதி தாளத்தில் அமைந்துள்ளது.

சொற்கட்டும் தாளமும்,

1 0 0
த, க, தி, மி, த, க, தி, மி,/ த, க, தி, மி,/ த, க, தி, மி,//

## 15) தெய் தெய் தித்தித் தெய் அடவு - 1

இதில் ஒரு அடவு மட்டும் உண்டு.
பதாகம், கடகாமுகம், அலபத்மம் எனும் முத்திரைகள் பயன்படுத்தப்படுகின்றன.
இது ஆதி தாளத்தில் அமைந்துள்ளது.

சொற்கட்டும் தாளமும்,

1 0 0
தெய், தெய், தித், தித், தெய்,/ தெய், தெய்/ தித், தித், தெய்,//

## 16) தாஹத ஜெம்தரி தா அடவு - 1

இவ் அடவின் நாட்டிய சொற்கட்டு "தெய் தெய் திதிதெய் தா"
சதுஸ்ர ஜாதி ரூபக தாளத்தில் இவ்வடவு அமைந்துள்ளது.
கடகாமுகம், அலபத்மம், பதாகம் என்னும் முத்திரைகள் இதில் பயன்படுத்தப்படுகின்றது.

சொற்கட்டும் தாளமும்,

0 1
தா, ஹ, த, / ஜெம், த, ரி, தா, ,,//



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17) ததிங்கிணதொம் அடவு

இது மகுட அடவு, முடி அடவு, தீர்மான அடவு என அழைக்கப்படுவது. கோர்வைகளின் இறுதியில் பயன்படுத்தப்படும் அடவு.
இதன் தாளம் சதுஸ்ர ஜாதி ரூபகதாளமாகும்
பதாகம், திரிப்பதாகம் போன்ற முத்திரைகள் பயன்படுத்தப்படும்.
ததிங்கிணத்தொம் - தக ததிங்கிணத்தொம் - தகதிகு ததிங்கிணத்தொம் என்பது இதன் சொற்கட்டாகும்.
இதனை, தெய் தித்தித் தெய் - தெய் தெய் தித்தித் தெய் - தெய் தெய் தெய் தித்தித் தெய் என நாட்டிய சொற்கட்டில் அமைக்கலாம்.

சொற்கட்டும் தாளமும்,

| 0 | 1 |
|---|---|
| த,திங்,கி,ண, | /தொம்,, த,க, த,திங்,கி,ண, // |
| தொம், த,க, | /தி,கு, த,திங்,கி,ண,தொம்இ // |

## 18) கிடதகதரிகிடதொம் -1

இவ் அடவும் கோர்வை அமைப்பின் இறுதியில் வருவதால் இதனையும் தீர்மான அடவு, முடியடவு, மகுட அடவு என அழைப்பர்.
இதன் தாளம் சதுஸ்ர ஜாதி ரூபக தாளமாகும்.
பதாகம், அலபத்மம் எனும் முத்திரைகள் பயன்படுத்தப்படுகின்றன.
கிடதகதரிகிட தொம் எனும் சொற்கட்டை உருட்டுச் சொற்கட்டு எனக் கூறுவர்.

| உருட்டுச் சொற்கட்டு | நாட்டியச் சொற்கட்டு |
|---|---|
| கிடதகதரிகிட தொம் - | தெய் தித்தித் தெய் |
| தக கிடதகதரிகிட தொம் - | தெய் தெய் தித்தித் தெய் |
| தகதிகு கிடதகதரிகிட தொம் - | தெய் தெய் தெய் தித்தித் தெய் |

சொற்கட்டும் தாளமும்,

| 0 | 1 |
|---|---|
| கிடதக தரிகிட / | தொம்,, த,க, கிடதகதரிகிட // |
| தொம்இ த,க, / | தி,கு, கிடதக தரிகிட தொம் // |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19) பஞ்சநடை- 5 ஐந்து வகையான ஜதிக்குரிய நடைகள்

இது தட்டி மெட்டி செய்வதால் இதனை தட்டுமெட்டடவு என அழைப்பர்.
இதற்கு உரிய தாளம் ஏக தாளம்.
இது ஐந்து வகையான ஜதிகளை கொண்டு ஐந்து வகை நடைகளாக செய்யப்படும்.
இவ் நடைகளை மாத்திரம் (பயிற்சி) தனியாக செய்யும்போது கை முத்திரைகள் பயன்படுத்துவது இல்லை.
உருப்படிகளில் சாகித்திய கைகள் செய்யும் போது இவ் நடைகள் அதிகம் பயன்படுத்தப்படும்.

நடையின் பெயர் -(ஜாதி) சொற்கட்டு எண்ணிக்கை
1. திஸ்ர நடை தகிட 3
2. சதுஸ்ர நடை தகதிமி 4
3. கண்ட நடை தகதகிட5
4. மிஸ்ர நடை தகிட தகதிமி 7
5. சங்கீர்ண நடை தகதிமி தகதகிட9

## 20) மெய்யடவு -1

இவ் அடவு தகதிமி என்ற சொற்கட்டுடன் செய்யப்படும்.
ஜதீஸ்வரம், தில்லானா போன்ற உருப்படிகளில் ரசனையை மெருகூட்டுவதற்காக இடையிடையே செய்யப்படும். உருப்படிகளில் செய்யும் போது அவ்வுருப்படியின் நடை,சொற்கட்டு என்பவற்றிற்கு ஏற்ப செய்யப்படும்.

( சில அடவுகளை செய்யும் போது ஒழுங்கு முறைகள் மாறி செய்யப்படுவதும் உண்டு. உதாரணமாக தெய்கத் தெய்கி, தத் தெய் தாம் போன்ற அடவுகளில் மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது அடவுகள் செய்யும் போது மூன்றாவதை நான்காவதாகவும், நான்காவதை மூன்றாவதாகவும் மாற்றி செய்வார்கள்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசிஆனந்தனின் சிந்தனைகள்!...

## தோல்கள்:-

பாம்பு தோலைக் கழற்றி வைத்துவிட்டுப் புறப்பட்டது. ஆடுகள் மேய்ந்துகொண்டிருந்த பக்கம் அது போனது. அங்கே நின்ற தனியன் ஆட்டிடம்"அதோ பார்...பாம்பு உன்னுடையவர்கள் இருக்கும் இடத்தை நோக்கித்தான் போகிறது. நச்சுப் பாம்பு பல் பட்டாலே போதும்..என்று கூறியது சேவல். அப்படி ஒன்றும் நடந்துவிடாது...பாம்பு தோலைக் கழற்றிப் புதிதாய்ப் பிறந்திருக்கிறது..என்றது தனியன் ஆடு. சிறிது நேரத்தில் ஆடுகளின் அலறல் சத்தம் புல்வெளியை உலுக்கியது. ஓசை வந்த திசை நோக்கித் தனியன் ஆடும் சேவலும் ஓடின. அங்கே அப்பாவி ஆடுகள் இரண்டு பாம்புக்கு இரையாகிச் செத்துக் கிந்தன. அப்போ சேவல் சொல்லியது..

"பல்லைக் கழற்றாத பாம்பு
தோலைக் கழற்றி என்ன
வாலைக் கழற்றி என்ன!...

## நட்பு:-

கடலோரத்தில் நண்டு நடந்துகொண்டிருந்தது. மணலில் பதிந்த நண்டின் கால்த்தடத்தை கடலலை அழித்துக்கொண்டே இருந்தது. நண்டுக்கு ஒன்றும் புரியவில்லை. ஒருநாள் நரி ஒன்று கடற்கரை ஓரம் நண்டின் கால்த்தடம் இருக்கிறதா என்று தேடி அலைந்தது. வளைக்குள் இருந்து ஓரக்கண்ணால் எட்டிப்பார்த்த நண்டுக்கு அலை தன் கால்த்தடத்தை அழித்த காரணம் இப்போதுதான் தெளிவானது. அலையின் நட்பை அடிமனத்தால் போற்றிய நண்டு தனக்குள்ளேயே அது சொல்லிக் கொண்டது.

"முன்பே காப்பான் அன்பே நட்பு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி முடிவு-142
## (புரட்டாதி--ஐப்பசி 2014)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ந | த் | தா | ர் | த | த் | பு |
| ல் | டு | டு | ட் | ப | ல் | த் |
| வ | ட் | சூ | ந் | த | ல் | த |
| ழி | மொ | ழ் | மி | த | யா | க |
| கோ | வ | ல | ன் | மெ | ளி | ம் |
| க் | ம் | ட | ப | ட் | வு | க |
| தீ | ப் | பெ | ட் | டி | வ | கா |

போட்டியில் கலந்துகொண்டவர்களும். பரிசு பெறுபவரும்.

திருமதி.ஜெயா.நடேசன் - Havixbeck
திருமதி.கண்மணி.சின்னத்தம்பி - Frankfurt
திருமதி.கலைவாணி.ஏகானந்தராசா - Weeze
திருமதி.சுலோசனா.புவனேந்திரன் - Duisburg
திருமதி.கலைமகள்.பதஞ்சலி - Weeze
செல்வன்.சிவரூபன்.சிவலிங்கம் - Swiss
திரு.தி.தேவானந்தராசா - Möchengladbach

போட்டியில் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றிகளும் வாழ்த்துக்களும்...இவர்களில் பரிசுபெறும் அதிஸ்டசாலி..
செல்வன் .சிவரூபன்.சிவலிங்கம் - Swiss

## கண்!.

கண்ணால் தெரியாத கடவுளுக்கு உதவுவதைவிட கண்ணால் தெரியும் ஏழைகளுக்கும், இலயாதவர்க்கும் உதவுவதே மனிதனின் முதல்கடமையாகும்!.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி -144
## (தை - மாசி - 2015)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

இ-வ:-

01-06 உலகத் தமிழ் மக்களின் பெருநாள்.

08-12 போர்க்காலத்தில் இந்த இடிபாடுகளில் நெரியுண்டு இறந்தவர்களும் பலர்.

22-24 சினிமா நடிகை ராதிகாவின் சின்னத்திரை ஒன்று.

29-35 இவர்களுக்காகவும் உலகில் கொண்டாடப்படும் தினம்.

40-42 பாரம் என்று பொருள்படும் (கு)

43-46 சிலரை அடக்கம் செய்யும் இடம்.

வ-இ:-

14-12 இலயாதவருக்கு இது கொடுப்போம் என்றும் கூறுவார்கள்.

18-15 தமிழர் வாழ்வு நீண்ட இது கொண்டது.

28-26 பிட்டியானது உயரமானது இந்த இடத்தை இப்படியும் கூறுவார்கள்

39-37 நம்மவர்களின் உணவு வகைகளில் ஒன்று.

கீ-மே:-

20-06 நம் ஊர் வீடுகளில் காணப்படுவது இப்போது குறைவடைந்துவிட்டது

22-01 சிலர் இது எழதுவதில் வல்லவர்கள்

43-29 உயர...உயரப் பறந்தாலும் இது வெள்ளையாகாது. (கு)

47-33 ஜேர்மனியில் இவர்களின் குடிவரவு அதிகரித்துவருகின்றது.

48-34 காடுஅழிப்பதால் மழைகுறைவடைகின்றது. காடு இதன் ஒத்தசொல். (கு)

மே-கீ:-

03-10 தாள், மா ஒத்த சொல். இப்படியாகவும் கூறலாம்.


05-26 கவிக்கு இப்புலவரையே ஒப்பிடுவர்.

18-46 தேய்பிறை இதன் எதிர்ச்சொல்.

49-35 பாடல் என்று பொருள்படும்

முடிவுதிகதி: **28-02-2015**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உயிர்க் கொல்லி நோய் "எய்ட்ஸ்"
01 டிசெம்பர் 2014, அன்று உலகம் முழுவதும் நினைவு கூரப்படுகின்றது

உலகை ஆட்டிப்படைக்கும் பயங்கர உயிர்க்கொல்லி நோயான எய்ட்சுக்கு இன்று வரை தீர்வு இல்லை.

பல மில்லியன் உயிர்களை கொன்று குவித்துள்ள இந்த கொடிய நோயை பற்றி மக்கள் அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 1ம் திகதி உலக எய்ட்ஸ் விழிப்புணர்வு தினம் எச்.ஐ.வி எனும் வைரஸ் கிருமியினால்தான் எய்ட்ஸ் ஏற்படுகிறது.

பொதுவாக எச்.ஐ.ஏ மனித உடலில் உள்ள எல்லா திரவங்களிலும் பழந்திருக்கிறது என்றாலும் கூட, இரத்தம், விந்து, பெண்ணுறுப்புகளில் உருவாகும் திரவம், தாய்ப்பால் ஆகியவற்றின் வாயிலாகத்தான் பரவுகின்றது.

எனவே ஆண்- பெண் உடலுறவின் போது பாதுகாப்பு முறைகளைக் கையாள்வது அவசியமாகின்றது. எச்.ஐ.வி தொற்று உள்ளவருடன் பாதுகாப்பற்ற உடலுறவு கொள்வோருக்கு இந்த எச்.ஐ.வி தொற்றி விடுகிறது. 80 சதவீத எய்ட்ஸ்க்கு காரணம் பாதுகாப்பற்ற உடலுறவு தான் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25 வயதுக்குட்பட்ட இளைஞர்களுக்கு எய்ட்ஸ் அதிகமாக பரவுகிறது. அதற்கு காரணம் அந்த வயதில் அவர்கள் பாலுறவில் அதிக நாட்டமிக்கவர்களாக இருப்பதால் பாதுகாப்பான உடலுறவை மறந்து விடுகிறார்கள்.

அதே போல், சுத்தம் செய்யப்படாத ஊசியை ஒருவருக்கொருவர் செலுத்திக் கொள்வதன் மூலமாகவும் HIV பரவுகிறது.

ஒரு எய்ட்ஸ் நோயாளியைப் பொறுத்தமட்டில் தகாத பாலுறவால் மாத்திரம் நோயைப் பெற்றிருப்பார் என்று கூற முடியாது.

சில சந்தர்ப்பங்களில் அத்தகைய பழக்கங்கள் இல்லாதவர்களும்கூட அவர்களை அறியாத சந்தர்ப்பங்களிலும் இந்நோய் தொற்றலாம். எனவே எய்ட்ஸ் நோயாளிகளை சாதாரண மனிதர்களாக கருதி அவர்களுக்கு உரிய உரிமைகளைகளையும், சலுகைகளையும் வழங்க வேண்டியது சமூகத்தின் கடமையாகும்.

ஆகவே மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி பாதுகாப்புடன் இருந்தால், எய்ட்ஸ் என்னும் கொடிய நோயிலிருந்து நம்மையும், சமூகத்தையும் காக்கலாம்.

இந்நாளில் எய்ட்ஸ் நோய் பற்றியும், அதன் கொடிய விளைவுகள் பற்றியும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இத்தினத்தின் பிரதான நோக்கம்.

இதையடுத்து அரசுகளும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் இந்நாளை உலகம் முழுவதும் நடைமுறைப்படுத்தி வருகின்றன.

பல்வேறு நோய்கள் தாக்கப்பட்ட ஒருவருக்கு அவருடைய உடலின் நோய் எதிர்ப்பு சக்தி குறையத் தொடங்கியிருப்பதை மருத்துவ பரிசோதனை உறுதி செய்யும் நிலைதான் எய்ட்ஸ் என்று அழைக்கப்படுகிறது.

## செய்தி: –

கடந்த ஆண்டில் உலகில் 134 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டிருப்பதாகவும் ஆகக்கூடுதலாக சிரியாவில் 65பேரும், பிலிப்பைன்சில் 14 பேரும், இந்தியாவில் 13 பேரும், பாக்கிஸ்தானில் 9 பேரும் கொல்லப்பட்டதாக உலக ஊடக சம்மேளனம் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுனாமியின் பத்தாண்டுகள்!...

சுனாமி Tsunami என்பது யப்பானிய மொழியில் "harbor wave (துறைமுக அலை) எனும் அர்த்தமுள்ள சொல்லின் அடிப்படையில், ஆழமான நீர்ப்பரப்பின் அடிப்பகுதியில் உண்டாகும் பூகம்பம் அல்லது பூமியதிர்வு காரணமாக உண்டாகும் ராட்சத அலைகளை குறிப்பிடுகின்றது.

அசாதாரண பூகோள நிகழ்வாகிய சுனாமி பற்றிய பீதி பல காலமாக மனிதரிடையே இருந்து வருகின்றபோதிலும் இந்த நூற்றாண்டில் வாழும் அனைவரையும் பீடிக்கும் அளவிற்கு 2004ம் ஆண்டு பேரழிவு வரலாற்றில் இடம்பிடித்து விட்டது.

கடந்த 40 வருடங்களில் நடந்திருக்க கூடிய மிகப்பெரும் இயற்கை பேரழிவாகபேசப்படும் டிசம்பர் 26 ம் திகதிய சுனாமி 2.50 000* மேலான மனித உயிர்களை பலிகொண்டும், பல பில்லியன் டொலரிலும் மேலான பொருளாதார நஷ்டத்தினையும் ஏற்படுத்தியிருந்தது. 1960 ம் வருடத்தின் பின்பு நிகழ்ந்த மிகப்பெரிய சுனாமி என வரலாற்றில் மட்டுமல்ல பூகோள ரீதியிலும் புதிய பதிவுகளையும் வடுக்களையும் பதித்துவிட்ட இயற்கைப் பேரழிவுடன் தொடர்புள்ள தகவல்கள் வருமாறு உள்ளது.

தமிழ் மக்களின் பண்டய இலக்கியங்களில் ஆழிப்பேரலை அல்லது கடல்கோள் என்பது சுனாமியை அர்த்தப்படுவதாக அறியப்படுகின்றது. அத்துடன் இது மூலமாக பழங்கால தமிழர்களினாலும் இத்தகைய பேரழிவுகள் எதிகொண்டதினை அறியமுடிகின்றது.

சுனாமி தொடர்பிலான தகவல்களும் நிகழ்வுகளும் கடந்த 4000 வருடம் காலமாக மிகவும் அறியப்பட்டும் பேசப்பட்டும் வந்தபோதிலும் சர்வதேசரீதியில் 1963ம் வருடம் நடந்த அனைத்துலக விஞ்ஞான மாநாட்டில் அகிலத்திற்கும் பொதுவான "சுனாமி" (Tsunami <http://www.ess.washington.edu/tsunami/specialized/events/eventstable.html>)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் சொல் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது. இயற்கை பேரழிவு பற்றிய பதிவுகள் ஆரம்பித்த காலத்தில் இருந்து (4000 வருடங்கள்) இன்றுவரை பதிவாகிய மிகப்பெரிய சுனாமிகள் முறையே 1883 (36,000 பேர் பலி) , 1998 ஜூலை (36,000 பேர் பலி) ,2004 ம் டிசம்பர் (250,000 <http://news.nationalgeographic.com/news/2004/12/1227_041226_tsunami.html, பேர்பலி) என்பன அதிக மனித உயிகளை காவுகொண்ட பேரழிவுகளாக வரலாற்றில் பதிவாகியுள்ளன.

இந்த நூற்றாண்டில் 2004 ம் டிசம்பர் 26 ம் திகதிய கடுமையான சுனாமியில் 11 நாடுகளைச் சேர்ந்த 250,000 மக்களின் உயிகளை உடனடியாகவும் மேலும் பல நூறு உயிர்களை அடுத்த சில நாட்களிலும் பறித்திருந்தது குறிப்பிடத்தக்கது. இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் குறிப்பாக இந்தோனேசிய நாட்டின் தீவுகளில் ஒன்றாகிய சுமத்திரா எனும் பகுதியில் கடலுக்கடியில் நிகழ்ந்த மிகப்பெரிய பூமியதிர்வு காரணமாக உருவாகிய ஆழிப்பேரலை (சுனாமி) பலிகொண்ட பன்நாட்டு மக்களின் எண்ணிக்கை சுமார் 2.50.000 பேராகும் இலங்கையில் சுமார் 36.000 பேர் இறந்தனர். பாதிக்கப்பட்ட ஏனைய நாடுகள்..

- இந்தோனேசியா *
- தாய்லாந்து
- பர்மா
- சீசெல்
- இலங்கை
- சோமாலி
- தான்சனியா
- கென்யா
- இந்தியா
- மலேசியா
- பங்களாதேஷ்

2004 ம் டிசம்பர் 26 ம் திகதிய கடுமையான சுனாமியால் பாதிக்கப்பட்ட பௌதீகத் தரவுகள்.பூகோள ரீதியில் <http://www.ngdc.noaa.gov/hazard/img/2004_1226.jpg> வர்ணிக்கப்படும்

முக்கிய 11 தட்டுக்கள் இரண்டில் பலநூறு வருடமாக நெருக்குதல் காரணமாக உருவாகி இருக்கக்கூடிய ஒட்டுமொத்த விசையின் உச்சக்கட்ட வெளிப்பாடுதான் இந்த நிகழ்வு என சொல்லப்படுகின்றது.இந்து சமுத்திரத்தின் கடலுக்கடியிலான பூமியதிர்வு இந்தோனேசிய நாட்டின் உள்ளூர்நேரம் காலை 7.58 க்கு நிகழ்ந்தது. பூமியதிர்வு அளவிடும் அலகில் 9.0

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

<http://www.ngdc.noaa.gov/hazard/img/2004_1226.jpg, எனும் குறியீட்டினால் அழைக்கப் படுகின்றது. இராட்சத வெடிப்பு காரணமாக உருவாகிய அலையின் அதிகபட்ச வேகம் மணிக்கு 1000 கிலோமீற்றராக பதிவாகியுள்ளது.

சுமத்திரா சுனாமி

7000 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ள சீசெல் நாட்டினையும் தாக்கியிருந்தது.மேலும் இந்த பேரழிவின் தாக்கம் இப்படி இருக்கும் என கற்பனையில் கூட பலர் நினைத்திருக்கவில்லை. இருந்த போதிலும் நடந்து முடிந்துவிட்ட சுனாமி அன்று தமிழ்நாட்டில் பலர் உயிரை ஒருவரால் காப்பாற்ற முடிந்ததாகவும் செய்தி மூலம் அறிந்தோம். மேற்படி நபர் சுனாமி பேரழிவு பற்றிய விபரணச் சித்திரத்தினை (Discovery Channel <http://dsc.discovery.com/>) சிலகாலம் முன்பு பார்வையிட்டதாகவும், அதில் சுனாமி காலத்தில் எவ்வாறு உயரமான குன்று அல்லது மலைகளில் ஏறி தப்ப முடியும் என சொல்லப்பட்ட விடயத்தினை கிரகித்த காரணத்தினால் அன்று அவரும் அந்த முறைகளில் பலரை உதவி செய்து காப்பாற்றி உள்ளாராம். ஆகவே எவ்வளவு விடயங்கள், தகவல்கள், செய்திகள் எங்கெல்லாம் உதவும் என்பதற்கு நல்ல உதாரணமாக மேற்படி சம்பவம் உள்ளது எனலாம்.

## இந்தியாவில்: –

-இந்தியாவில் தந்போது சுமார் 100 மில்லியன் மக்கள் சிறு குடிசைகளில் வாழ்கிறார்கள். இதனால் தீ சம்பவங்கள் அடிக்கடி நிகழ்வதாகவும் மழைக்காலங்களில் பெரும் பாதிப்பு ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

-இந்தியா தமிழ்நாட்டில் மட்டும் சுமார் 1லட்சத்து 20 ஆயிரம் சிறுவர்கள் குழந்தைகள் கட்டாய வேலைகளுக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாகவும் இவர்களில் ஆயிரக்கணக்கானவர்கள் கொத்தடிமை வேலைகளுக்கும் அமர்த்தப்பட்டிருப்பதாகவும் புள்ளிவிபரம் ஒன்று குறிப்பிட்டுள்ளது.

வெளிநாடுகளில் சுமார் 600 இந்தியர்கள் சுமார் 20லட்சத்து 80 கோடி ரூபா கறுப்புப்பணம் பதுக்கி வைத்திருக்கிறார்கள் என இந்திய புலனாய்வு நிறுவனம் அறிவித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டவிரோதமாக படகில் பயணித்த 1,300 அகதிகள்:

சுற்றிவளைத்த இத்தாலிநாட்டுக் கடற்படை28.12.2014 அன்று ஐரோப்பாவிற்கு சட்டவிரோதமாக குடியேறச் சென்ற 1300 பேர் மீட்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

சிரியா போன்ற நாடுகளில் உள்நாட்டு போர் தொடர்ந்து நடைபெற்று வருகிறது, எனவே அங்குள்ள மக்கள் ஐரோப்பாவிற்கு அகதிகளாக படகு மூலம் செல்கின்றனர்.


அப்படி செல்லும் அவர்கள் இத்தாலி கடற்பகுதியைத் தாண்டிதான் செல்ல வேண்டும். படகுகளில் அனுமதிக்கப்பட்ட அளவை விட அதிகம் பேர் பயணம் செய்வதால் நடுக்கடலில் கவிழ்ந்து இறப்பு விகிதம் அதிகரித்து வருகிறது.

எனவே சட்டவிரோதமாக வருபவர்களை இத்தாலி கடற்படை அவ்வப்போது மீட்டு சொந்த நாடுகளுக்கு அனுப்புகிறது.

இதேபோல் கிறிஸ்துமஸ் நாளன்று பல்வேறு பகுதிகளில் 1300 பேரை இத்தாலி நாட்டுக் கடற்படை மீட்டுள்ளது.

இதில் நைஜீரிய பெண் ஒருவர் படகிலேயே குழந்தையை பெற்றெடுத்துள்ளார். மற்றொரு படகில் பயணம் செய்த நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் இந்த ஆண்டு டிசம்பர் மாதம் 17-ந்தேதி வரை இத்தாலிக்கு கடல் வழியாக 1.67.462 பேர் வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மா சே துங்!..

ராஜலட்சுமி சிவலிங்கம்

சீன மார்க்சியக் கொள்கையாளர், போர் வீரர், கவிஞர், சிறந்த ராஜதந்திரி மா சே துங் (mao zedung)பிறந்த நாள் (டிசம்பர் 26). அவரைப் பற்றிய அரிய முத்துக்கள் பத்து:

- சீனாவின் ஷாவ்ஷான் கிராமத்தில் சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். 6 வயதில் விவசாய வேலைகள் பார்த்தார். 13 வயதில் படிப்பை நிறுத்திவிட்டு முழு நேர விவசாயி ஆனார்.

- "வேர்ட்ஸ் ஆஃப் வார்னிங்" என்ற நூலைப் படித்து சீனாவின் பலவீனங்கள், மேற்கத்திய நாடுகளின் வலிமைகளைப் பற்றி அறிந்துகொண்டார். 6 மாத காலம் ராணுவ அனுபவம் பெற்றவர்.

- இவருக்கு 18 வயது இருக்கும்போது, சீனா குடியரசாக அறிவிக்கப்பட்டது. இங்கு நிலையான, ஒற்றுமையான அரசு ஏற்படவில்லை. இந்நிலையில் இடதுசாரி அரசியல் கொள்கைகள் இவரைக் கவர்ந்தன. 1920-ல் கொள்கைப் பற்றுமிக்க பொதுவுடைமையாளர் ஆனார். விரைவில் பொதுவுடைமைக் கட்சியின் உயர் அதிகாரக் குழு உறுப்பினர் ஆனார்.

- ஆட்சியைப் பிடிப்பதில் சீனப் பொதுவுடைமைக் கட்சி படிப்படியாக முன்னேறியது. அந்தக் காலகட்டத்தில் ஆட்சியை எதிர்த்து தனது ஆதரவாளர்களுடன் நீண்ட நடைபயணம் மேற்கொண்ட இவர், 8 ஆயிரம் மைல் தூரத்தைக் கடந்தார்.

- 1935-ல் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றார். அதன் பிறகு கட்சி நல்ல வளர்ச்சி பெற்றது.

-அரசை எதிர்த்து நீண்ட நெடிய போர் புரிந்தார். கட்சி வெற்றி பெற்றது. 1949-ல் சீனா குடியரசு நாடானது. மக்கள் சீனக் குடியரசின் முதல் அதிபராக மா சே துங் பதவி ஏற்றார். அப்போது இவருக்கு வயது 56.

- சீனாவின் பொருளாதார நிலை அப்போது அதல பாதாளத்தில் இருந்தது. பழைய மரபுகளில் ஊறிக் கிடந்த பல கோடி மக்கள் படிப்பறிவில்லாமல் இருந்தனர். புதிய சீனாவைப் படைக்கும் மாபெரும் பணி இவர் முன்பு மலைபோல் எழுந்து நின்றது. "வலிமையும் வளமும் மிக்க சீனா.. முன்னோக்கியப் பெரும் பாய்ச்சல்" என்ற மகத்தான தொலைநோக்குடன் நாட்டு முன்னேற்றத்துக்காகப் பாடுபட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- செல்வாக்கு படைத்த தலைவராக ஆதிக்கம் செலுத்திய இவரது ஆட்சிக் காலத்தில் சீனா அடியோடு மாறியது. தொழில்மயமாக்கல், கல்வி வளர்ச்சி, விவசாயம், பொது சுகாதாரம் ஆகியவற்றில் நாடு முன்னேற்றம் கண்டது. அரசியல் பொருளாதாரப் புரட்சி மட்டுமின்றி சமூகப் புரட்சியையும் தூண்டினார்.
- நாட்டு மக்களிடையே தீவிர தேசப் பற்றை உண்டாக்கினார். நாடு நவீனமயமானது. பல நூற்றாண்டு கால அந்நிய ஆக்கிரமிப்புக்குப் பிறகு, 20-ம் நூற்றாண்டில் சீனா மகத்தான வளர்ச்சி கண்டது.
- சீனாவில் பெரும் தொழிற்புரட்சியும், வேளாண் புரட்சியும் நிகழ்த்திய மா சே துங் ஒரு புரட்சிகரத் தலைவர் மட்டுமின்றி, தற்போதைய சீன வல்லரசின் சிற்பியாகவும் போற்றப்படுகிறார். இவரது கொள்கைகள் மாசோயிசம் என்று புகழ்பெற்றன. 83-வது வயதில் காலமானார்.

தகவல்: –

- உலகில் ஒரு வருடத்தில் சராசரியாக பிறந்தவுடன் சுமார் 1 மில்லியன் குழந்தைகள் இறந்துவிடுவதாகவும் 1 - 4 கிழமைக்குள் சுமார் 2.8 மில்லியன் குழந்தைகள் இறந்துவிடுவதாகவும் உலக சுகாதார தாபனம் அறிவித்துள்ளது.
- உலகில் தந்போது 317 மில்லியன் சிறுவர் தொழிலாளர்கள் வேலைவாங்கப்படுகிறார்கள் என்றும் ,வர்களில் 126 மில்லியன் சிறுவர்கள் கொத்தடிமை வேலைகள் செய்கிறார்கள் எனவும் ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு அமைப்பின் அறிக்கை தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீன வானொலியில் தமிழ் ஒலிபரப்பு கலாசாரப் பாலம்..

சீன அரசுக்குச் சொந்தமான சர்வதேச வானொலி நிலையத்தின் தமிழ் ஒலிபரப்பிற்கு அமோக வரவேற்பு கிடைத்துள்ளது இந்த ஒலிபரப்பு, சீன - தமிழ் கலாசாரங்களை இணைக்கும் பாலமாக திகழ்வதாக பலரும் பாராட்டு தெரிவித்துள்ளனர் என்றார் பூங்கோதை. சீன அரசு சைனா ரேடியோ இன்டர்நேஷனல் என்ற பெயரில், வெளிநாடுகளைச் சேர்ந்த மொழிகளிலும் நிகழ்ச்சிகளை ஒலிபரப்புகிறது. தமிழிலும் நிகழ்ச்சிகள் ஒலிரப்பாகி வருகிறது. அங்குள்ள வானொலி நிலையத்தில், தமிழ் ஒலிபரப்பு பிரிவில், 20 பேர் பணியாற்றுகின்றனர்.இவர்களில் சிலர், தமிழகத்தில் இருந்து சென்றவர்கள். பெரும்பாலானோர், சீனாவைச் சேர்ந்தவர்கள். இவர்கள் முறைப்படி தமிழ் பயின்று, நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றனர். இவர்களில் முக்கியமானவர், லியோ லிஜாங் என்ற பெண். இவர், தமிழ் ரசிகர்களின் விருப்பத்தை ஏற்று, பூங்கோதை என, அழகிய தமிழ் பெயரை தனக்கு சூட்டியுள்ளார்.

அவர் கூறியதாவது நான் நடத்தும் நிகழ்ச்சிக்கு, தமிழகத்தில் இருந்து மட்டுமல்லாமல், உலகின் பல்வேறு பகுதிகளிலும் வசிக்கும் தமிழர்களிடையே பெரும் வரவேற்பு கிடைத்துள்ளது. இந்தத் துறையில் பணியாற்றுவதற்காகவே, முறைப்படி தமிழ் படித்தேன். தமிழில் டிப்ளமோ படித்துள்ளேன். தமிழ், கடினமான இலக்கணங்களை உடைய மொழி. ஆனால், கற்றபின் தான், அந்த மொழியை விட இனிமையான மொழி, வேறு எதுவும் இல்லை என்பதை அறிந்தேன்.இப்போது, இந்தியாவில் இருந்து யார் வந்தாலும், இரு கரங்களையும் குவித்து, "வணக்கம்" என, தமிழில் தெரிவிப்பேன். இது, அவர்களுக்கே ஆச்சர்யத்தை ஏற்படுத்தும். "சீனப் பெண், இவ்வளவு அழகாகத் தமிழ் பேசுகிறாளே" என, ஆச்சர்யப்படுவர். விரைவில் தமிழகத்துக்கு செல்ல திட்டமிட்டுள்ளேன்.இவ்வாறு, அவர் கூறினார்., இவருடன், தமிழகத்தைச் சேர்ந்த மணிகண்டன் என்பவரும், சீன வானொலியின் தமிழ் ஒலிபரப்பில், "நட்புப் பாலம்" என்ற நிகழ்ச்சியை தொகுத்து வழங்குகிறார். அவர் கூறுகையில், "தமிழ் மிகவும் பழமையான மொழி. தமிழகத்தில் இருந்து, சீனா வெகு தொலைவில் உள்ளது. ஆனாலும், இரு கலாசாரங்களையும் இணைக்கும் பாலமாக இந்த வானொலி நிகழ்ச்சி விளங்குகிறது,"என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சீன சர்வதேச வானொலி நிலையம், 1941ல், தொடக்கப்பட்டது. இதில், 60 மொழிகளில் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகின்றன. சீன வானொலியின் தமிழ் ஒலிபரப்பு, 1963ல் தொடங்கியது தமிழ் நிகழ்ச்சிகளை பாராட்டி, ஆண்டுக்கு, 46 லட்சம் கடிதங்கள் வருகின்றன. தமிழ் மட்டுமின்றி பெங்காலி, உருது போன்ற இந்திய மொழிகளின் ஒலிபரப்புகளும் வரவேற்பை பெற்றுள்ளன. சீனாவுக்கும், தமிழகத்துக்கும் பண்டை காலத்திலேயே தொடர்பு உள்ளது. சிலம்பம் போன்ற கலைகள்,தமிழகத்தில் இருந்து தான், சீனாவுக்கு சென்றன. சிலம்பக் கலையை அடிப்படையாக வைத்துத்தான், சீனாவில் தற்போது ஏராளமான தற்காப்பு கலைகள் உருவாகியுள்ளன. இந்த வரலாற்றை, சீன மக்களே ஏற்கின்றனர்.

தீனதயாளன் சீனாவுக்கு சென்ற தமிழக இளைஞர் குழு பிரதிநிதி

---

விளையாட்டுச் செய்தி.

1. Asia Cup ஆசிய வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டப் போட்டிகள் 10-01-2015 அவுஸ்திரேலியாவில் ஆரம்பமாகியுள்ளன. A, B. C, D என நான்கு பிரிவுகளாக 20 நாடுகள் பங்குகொள்ளும் இறுதிப்போட்டி எதிர்வரும் 31-01-2015 அன்று நடைபெறும்.

2. கைப்பந்தாட்டாடம் உலககிண்ணப் போட்டிகள் கட்டார் - டோகாவில் 15.1.2015 தொடக்கம் 1-2-2015 வரை நடைபெறுகின்றது. 24 நாடுகள் இப்போட்டியில் பங்கு கொள்கின்றன.

3. உலகக்கிண்ண கிரிக்கட் போட்டிகள் எதிர்வரும் 14-2-2015 தொடக்கம் 29.3.2015 வரை அவுஸ்திரேலியாவிலும் நியூசிலாந்திலும் நடைபெற இருக்கின்றன. 14 நாடுகள் இப்போட்டிக்குத் தெரிவாகியுள்ளன.

4. 2014ம் ஆண்டின் உலகின் தலைசிறந்த உதைபந்தாட்ட வீரனாக போத்துக்கல் நாட்டுவீரன் கிறிஸ்ரியானோ றொனால்டோ (Cristiano Ronaldo) தெரிவாகியுள்ளார். F I F A என்று அழைக்கப்படும் சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனம் இவரது தெரிவை அறிவித்து வெற்றிக்கிண்ணத்தையும் பரிசளித்துள்ளது. இத்தோடு இவர் 3 தடவைகள் இந்தக் கிண்ணத்தைப் பெற்றிருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்க விடையமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபயமளிக்கும் அற்புத மனிதர்கள்!..

குறையுள்ள 29 குழந்தைகளை தத்தெடுத்து வாழும் தம்பதியினரின் மனிதாபிமானம். குறைபாடுள்ள 29 பிள்ளைகளை தத்தெடுத்து வளர்த்து வருகின்றனர்.

அமெரிக்காவின் வெர்ஜினிய மாநிலத்தில் (Virginia) உள்ள பாலிங் வோட்டர்ஸ்(Falling Waters) பிரதேசத்தை சேர்ந்த ஜெனி பிறிக்ஸ் பால்(Jeane Briggs-Paul)என்ற தம்பதியினர் தாங்கள் பெற்ற 5 குழந்தைகளுடன் உலகெங்கிலும் உள்ள 29 குறைபாட்டுள்ள குழந்தைகளை தத்தெடுத்து வளர்க்கின்றனர்.

மெக்ஸிகோ(Mexico), ரஷ்யா(Russia), உக்ரைன்(Ukraine), பல்கேரியா(Bulgaria) உள்ளிட்ட நாடுகளை சேர்ந்த உடல் குறைபாட்டால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளை இவர்கள் வளர்க்கின்றனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இவர்கள் வளர்க்கும் குழந்தைகளுக்கு புற்றுநோய், இளம்பிள்ளைவாதம், சிறுநீரக பிரச்சினைகள் இருப்பதாக கூறப்படுகிறது.

இதுகுறித்து இத்தம்பதியினர் கூறுகையி ல், எங்களுக்கு குழந்தைகளுடன் கொஞ்சி விளையாடுவது மிகவும் பிடிக்கும் என்றும் இன்னும் பல குழந்தைகளை தத்தெடுக்க ஆசைப்படுகிறோம் எனவும் தெரிவித்துள்ளனர்.

தகவல்: –

மேற்கு ஆபிரிக்க நாடுகளைத் தாக்கிவரும் எபோல கொடிய நோயினால் 2014 டிசம்பர்வரை 8.235 பேர் பலி. 21.000 பேர் நோயினால் பாதித்துள்ளனர் என உலக சுகாதார தாபனம் அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தா அரசின் தோல்வி...

இலங்கையில் நடைபெற்று வந்த குடும்ப ஆட்சியை நாட்டு மக்கள் முடிவுக்குக் கொண்டு வந்து மஹிந்தவை வீட்டுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.ஜனாதிபதி தேர்தல் நடைபெற்று முடிவுகளும் அறிவிக்கப்பட்டு பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் 7ஆவது ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ளார். கடந்த கால அராஜக ஆட்சிக்கு மக்கள் நல்ல தீர்ப்பை வழங்கியுள்ளனர்.

அம்பாந்தோட்டையில் பிறந்த மகிந்த ராஜபக்ச தனது தந்தையாரின் அரசியல் வழியிலேயே தானும் அரசியலில் நுழைந்தவர்.1970 ஆம் ஆண்டு சுதந்திரக் கட்சியில் இணைந்து நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு உறுப்பினரானார். எனினும் 1977 ஆம் ஆண்டு உறுப்பினர் பதவியை இழந்தார். மீண்டும் 2004 ஆம் ஆண்டில் இருந்து 2005 ஆம் ஆண்டு வரை இலங்கையின் பிரதமராக இருந்தார். 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதியாகச் சந்திரிக்கா பண்டாரநாயக்க இருந்தார். எனினும் அவரது ஆட்சியில் மாற்றத்தை ஏற்படுத்த நினைத்த சிங்கள மக்கள் தேர்தலில் போட்டியிட்ட மகிந்த ராஜபக்சவை வாக்கிட்டு வெற்றிபெறச் செய்தனர்.

அதேவேளை, 2005 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்களைப்புறக்கணிக்குமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் கோரியிருந்தனர். இதற்கமைய தமிழ் மக்கள் 2005ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலை புறக்கணித்திருந்தனர்.இருப்பினும் தமிழர்களது வாக்குகள் இன்றி 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டு ஆட்சிப் பீடம் ஏறினார் மஹிந்த.அவர் தனது ஆட்சியில் பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்பதற்குப் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து வந்தார். அவரது காலப் பகுதியில் வடக்கு-கிழக்கில் பலர் காணாமல்போயினர்.கடத்தப்பட்டனர். சுடப்பட்டனர். பல்லாயிரக்காண மக்கள் கொல்லப்பட்டும் , அங்கவீனர்களாகியும், 2009 மே 18 ஆம் திகதி போர் முடிவுக்கு கொண்டுவரபபட்டது பல்லாயிரக்காண மக்கள் கொல்லப்பட்டனர் .போர் முடிந்து பல ஆண்டுகள் கடந்த நிலையிலும் தமிழ் மக்களின் தீர்வுக்கான செயற்பாடுகள் எவையும் மகிந்தவால் முன்னெடுக்கப்படவில்லை.இந்தநிலையில், மீண்டும் 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற்றது. அப்போது வடக்கு மக்கள் வாக்களிக்கும் நிலையில் இருக்கவில்லை.

முகாம்களிலும், தடுப்புக்களிலும், காணாமல்போனவர்களாகவும் ,நலிவடைந்தவர்களாகவும் அவர்கள் காணப்பட்டனர். இதனால் மகிந்தவை எதிர்த்து முழுமையாக வாக்களிக்க முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் தென் பகுதியில் உள்ள மக்கள், பயங்கரவாதத்தை ஒழித்து நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தினார், அபிவிருத்தியைக் கொண்டு வருகின்றார் என்ற எண்ணப்பாட்டில் மகிந்தவுக்கு வாக்களித்து அவரை இரண்டாம் முறையாக ஆட்சிப் பீடம் ஏற்றினர். அன்றைய காலப் பகுதியில் இருந்து குடும்ப ஆட்சி மேலும் வலுப்பெற்றது. தனது அண்ணனை, தம்பிகளை, மகனை , மருமகனைப் பதவிகளில் அமர்த்தி ஆட்சியைப் பலமாக நகர்த்திச் சென்றார்.

இந்தக் குடும்ப ஆட்சிக்குக் காலப்போக்கில் தமிழ் மக்கள் மட்டுமல்ல சிங்கள மக்களும், முஸ்லிம் மக்களும் பலிக்கடா ஆக்கப்பட்டனர்.அபிவிருத்தி என்ற அடிப்படையில் தனது ஊருக்கு தேவையான அனைத்து வசதிகளையும் மேற்கொண்டதுடன்.தங்களது பதவியும், பெயரும் எக்காலத்திலும் நிலைத்து நிற்கவேண்டும் என்பதற்காகத் தங்களது பெயர்களில் கட்டிடங்களை அமைத்தும், பெரும் முதலீடுகளையும் மேற்கொண்டனர்.இவை அனைத்தும் அம்பாந்தோட்டையிலேயே நடைபெற்றன. ஏனைய மாகாணங்களுக்கு மகிந்த வழங்கிய அபிவிருத்தி வீதி திருத்தல் தான். அதிலும் பெருந்தெருக்களே புனரமைக்கப்பட்டன. இன்னும் எத்தனை ஆயிரம் வீதிகள் திருத்தப்படாது உள்ளன.

இது ஒரு புறமிருக்க 2009 ஆண்டு இடம்பெற்ற போரில் மனித உரிமை மீறல்களில் மகிந்த அரசு ஈடுபட்டது என்ற குற்றச்சாட்டு உள்நாட்டில் உள்ள பல்வேறு கட்சிகளாலும் சர்வதேசத்தினாலும் முன் வைக்கப்படுகின்ற நிலையில் இதுவரை எந்த முன்னேற்றமான விசாரணைகளோ தீர்வுகளோ மேற்கொள்ளப்படவில்லை. இதற்கு நீதியாக தீர்வு ஒன்றினைப் பெற மகிந்த சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் எனத் தமிழர்கள் எண்ணுகிறார்கள். இந்த மகிந்த அரசு பயங்கரவாதத்தை ஒழித்துச் சமாதானத்தை ஏற்படுத்தியதாக அறிவிக்கப்பட்டு 5 வருடங்களைக் கடந்துள்ள நிலையிலும் சிறுபான்மையினருக்கு நிலையான தீர்வு ஒன்று பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை.மென்மேலும் "வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல" மகிந்த அரசு சிறுபான்மையினருக்கு அநீதிகளை இழைத்து வந்தது.

இந்த அரசினால் பாதிக்கப்பட்ட ஒட்டுமொத்த நாட்டு மக்களும் ஒன்றிணைந்து சிறந்த பாடம் ஒன்றைப் புகட்டியுள்ளனர்.சிறுபான்மையினருக்கு மட்டுமல்ல பெரும்பான்மையினருக்கும் மகிந்தவை வீட்டுக்கு அனுப்பவேண்டும் என்ற எண்ணம் இருந்துள்ளது என்பதற்கு இது நல்ல எடுத்துக்காட்டு.அத்துடன் அராஜகத்திற்கு கிடைக்கும் மக்களின் பதில் இன்றும் என்றும் எவருக்கும் இதுவே என்பதை இன்றைய ஜனாதிபதித் தேர்தலின் முடிவு தெட்டத் தெளிவாகக் காட்டியுள்ளது. எனவே எதிர்காலத் தலைவர்களும் இதனைக் கருத்திற்கொண்டு நாட்டையும் ,மக்களையும் ஆட்சி செய்யவேண்டும் என்பதே மக்கள் ஆணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய ஜனாதிபதி மைத்திரி-.... ஒரு கண்ணோட்டம்

இலங்கையின் 7வது ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டிருக்கும் மைத்திரிபால சிறிசேனவின் வாழ்க்கைக் குறிப்பு, குறித்த ஒரு கண்ணோட்டம் பிறப்பு: 1955, செப்டம்பர் 3 ஆம் திகதி, கனேமுல்லவில் உள்ள விவசாயக் குடும்பத்தில் பிறந்தார்.ஆரம்பக்கல்வி: பொலன்னறுவ தோபா வெவ கல்லூரி, பொலன்னறுவ ரோயல் கல்லூரி.உயர்கல்வி: ரஷ்யா மார்க்சிம் கோர்க்கி கல்விக் கழகத்தில் அரசியல் அறிவியல் டிப்ளோமா பட்டம்அரசியல் ஈடுபாடு: பாடசாலை பருவத்தில் இடதுசாரி கொள்கைகளில் ஈடுபாடு. குடும்பம்: மனைவி ஜெயந்தி புஷ்பகுமார, 3 பிள்ளைகள்

அரசியல் பிரவேசம்: 17 வயதில் பொலன்னறுவ சி.ல.சு.க. இளைஞர் அமைப்பு செயலாளர்.சிறைவாசம் 1971 ஜே.வி.பி. கிளர்ச்சியின் போது மட்டு சிறையில் அடைப்பு முழுநேர அரசியல்: 1978 இல் சு.க. வில் முழுநேர அரசியலில் குதிப்பு அமைப்பாளர் : 1982 இல் பொலன்னறுவை சு.க. அமைப்பாளராக நியமிப்பு பாராளுமன்றம் தெரிவு : 1989இல் முதற்தடவையாக பாராளுமன்றம் தெரிவு.பிரதி அமைச்சர் : 1994 தேர்தலில் அதிகூடிய வாக்குகள் பெற்று தெரிவாகி நீர்ப்பாசன பிரதி அமைச்சராக நியமிப்புஅமைச்சர் : 1997 இல் அமைச்சரவை மாற்றத்துடன் மகாவலி அபிவிருத்தி அமைச்சராக நியமிப்பு. கட்சி செயலாளர் : 2001ஆம் ஆண்டில் சு.க. செயலாளராக நியமிப்புஅமைச்சு பதவிகள் : நாடாளுமன்ற விவகார அமைச்சர், ரஜரட்ட அபிவிருத்தி அமைச்சர், விவசாய அமைச்சர், சுகாதார அமைச்சர்

சபை முதல்வர் : 2004 இல் சபை முதல்வராக நியமிப்புகுண்டுத்தாக்குதல் : 2008 அக்டோபர் 9 இல் பிலியந்தலையில் தற்கொலைகுண்டுத்தா க்குதல் உயிர்தப்பல் அரசிலிருந்து விலகல் : 2014 நவம்பர் 21 இல் ஐ.ம.சு.மு.வில் இருந்து விலகி பொது வேட்பாளராக போட்டிஜனாதிபதியாக தெரிவு : 2015 ஜனவரி 9 ஆம் திகதி ஜனாதிபதி தேர்தலில் 7 ஆவது ஜனாதிபதியாகத்தெரிவு. சாதனைகளில் சில துளிகள் : விவசாய அமைச்சராக விவசாயிகளுக்கு 350 ரூபா பசளை நிவாரணம் வழங்க பங்களிப்பு. மொரகஹகந்த களுகங்கை, வளவ நீர்ப்பாசன திட்டங்கள் ஆரம்பிப்பு

2000 ஆம் ஆண்டில் நெல் சந்தைப்படுத்தல் சபை மூடும் சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்பு உத்தரவாத விலைக்கு நெல் கொள்வனவு செய்தல் பயிரிடுவோம் நாட்டை காப்போம் திட்டத்தினூடாக உள்நாட்டு உணவு உற்பத்தியை மேம்படுத்த நடவடிக்கை எடுத்தல்புகை,மதுசாரத்திலிருந்துநாட்டைமீட்கும்போராட்டத்திற்கு உலக சுகாதார ஸ்தாபனம் ஹவார்ட் பல்கலைக்கழகம் என்பன 2013ல் விருது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகரட் பெட்டியில் 80 வீதம் அறிவுறுத்தல்படம் பிரசுரிக்க நடவடிக்கை எடுத்தமை சேனக பிபில ஊடாக கொள்கையை செயற்படுத்த முன்வரல் சு.க.தலைமையிலான ஐ.மு.சு.மு.வின் வெற்றிக்கு பங்களிப்பு 2004 இல் சு.க. ஜே.வி.பி ஒப்பந்தம், 2006 இல் பயங்கரவாதத்தை தோற்கடிக்க சு.க. - ஐ.தே.க ஒப்பந்தம் என்பவற்றில் கைச்சாத்து - அதன் பின்னர், தற்போதைய ஜனாதிபதி மஹிந்தவின் தலைமைக் காலத்திலும் அதே பதவி நிலையில் நீடித்துவந்த மைத்திரி பால, விவசாயத்துறை அமைச்சராக பதவி வகித்தார்.அதன் பின்னர், விவசாயம் சம்பந்தப்பட்ட அரசாங்கத்தின் பல்வேறு அமைப்புகளுக்கு தலைமைதாங் கிய இவர், 4 ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட அமைச்சரவை மாற்றத் தின்படி, சுகாதார அமைச்சராக பதவி ஏற்றார். விடுதலைப் புலிகளுடனான போர் உச்சகட்டத்தைத் தொட்டிருந்த காலத்தில் 2008 ஆம் ஆண்டு ஒக்டோபர் 9 ஆம் திகதி கொழும்பின் புறநகர்ப்பகுதியான பிலியந்தலை யில் பெண்ணொருவரால் நடத்தப் பட்ட தற்கொலை குண்டுத் தாக்குதல் முயற்சி ஒன்றில் இருந்து மைத்திரிபால சிரிசேன உயிர்தப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது

## இலங்கையில் ஜனவரி 1ம் திகதியில்........

1858 - இலங்கையில் தந்தி சேவை ஆரம்பிக்கப்பட்டது. இது கொழும்புக்கும்- காலிக்கும் இடையே முதன்முதலாக இடம்பெற்றது.

1866 - யாழ்ப்பாணத்தில் முதன் முதலாக காவல்துறை அமைக்கப்பட்டது.

1872 - இலங்கையில் ரூபாய், மற்றும் சதம் ஆகிய நாணயங்கள் அறிமுகப் படுத்தப்பட்டன.

1883 - இலங்கையின் தமிழர் தாயகம் வடக்கு, கிழக்கு என இரண்டு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது.

1896 - இலங்கையில் முன்னர் ரொபேர்ட்சன் நிறுவனத்தின் பொறுப்பில் இருந்த தொலைபேசி நிறுவனத்தை இலங்கை அரசு கையேற்றது.

2008 - கொழும்பு கொட்டாஞ்சேனையில் உள்ள பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான தியாகராஜா மகேஸ்வரன் சுட்டுக்கொலை செய்யப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதியாகக் கிடைக்கப்பெற்ற சரியான வாக்களிப்பு வீதங்கள்.

01) கொழும்பு 54
02) கம்பகா 65
03) களுத்துறை 70
04) கண்டி 75
05) மாத்தளை 75
06) நுவரெலியா 80
07) காலி 80
08) மாத்தறை 73
09) அம்பாந்தோட்டை 70
10) யாழ்ப்பாணம் 58
11) மன்னார் 68
12) வவுனியா 66
13) முல்லைத்தீவு 73
14) கிளிநொச்சி 64
15) மட்டக்களப்பு 63.3
16) அம்பாறை 70
17) திருகோணமலை 60
18) குருநாகல் 76
19) புத்தளம் 71
20) அனுராதபுரம் 76
21) பொலன்னறுவ 80
22) பதுளை 61
23) மொனறாகலை 75
24) இரத்தினபுரி 84
25) கேகாலை 70
26) திகாமடுல்ல 70

**இறுதி முடிவு**

| கட்சிகள் | பெற்ற வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரிபால | 6217162 | 51.28% |
| மஹிந்த | 5768090 | 47.58% |
| ஆராச்சிகே ரத்நாயக்க சிறிசேன | 18174 | 0.15% |
| நாமல் ராஜபக்ஷ | 15726 | 0.13% |
| இப்றாஹிம் மிப்லார் | 14379 | 0.12% |
| பனாகொட டொன் பிரின்ஸ் சொலமன் அநுர லியனகே | 14351 | 0.12% |
| ருவனதிலக பேதுரு ஆராச்சி | 12436 | 0.1% |
| ஐதுருஸ் மொஹமட் இல்லியாஸ் | 10618 | 0.09% |
| துமிந்த நாகமுவ | 9941 | 0.08% |
| சிறிதுங்க ஜயசூரிய | 8840 | 0.07% |
| சரத் மனமேந்திர | 6875 | 0.06% |
| பாணி விஜேசிறிவர்தன | 4277 | 0.04% |
| அநுருத்த பொல்கம்பல | 4260 | 0.04% |
| சுந்தரம் மஹேந்திரன் | 4047 | 0.03% |
| எம். பி. தெமிணிமுல்ல | 3846 | 0.03% |
| பத்தரமுல்லே சீலரதன தேரோ | 3750 | 0.03% |
| பிரசன்ன பிரியங்கர | 2793 | 0.02% |
| ஜயந்த குலதுங்க | 2061 | 0.02% |
| விமல் கீகனகே | 1826 | 0.02% |
| செல்லுபடியான வாக்குகள் | 12123452 | 98.85% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 140925 | 1.15% |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்கு | 12264377 | 81.52% |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | 15044490 | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்தகா ஜனாதிபதி தேர்தல்ள் ஒரு பார்வையில்....

| திகதி | பெயர் | கட்சி | வாக்குகள் | வீதம் |
|---|---|---|---|---|
| 1982.10.20 | ஜெயவர்த்தனா | ஐ.தே.க | 34.50.811 | 52.91 வீதம் |
| | கொப்பேகடுவ | ஸ்ரீ.ல.சு.க | 25.48.430 | 39.07 வீதம் |
| 1988.12.19 | பிரேமதாச | ஐ.தே.க | 25.69.199 | 50.43 வீதம் |
| | சிறிமாவோ | ஸ்ரீ.ல.சு.க | 22.89.860 | 44.95 வீதம் |
| 1994.11.09 | சந்திரிகா | ஸ்ரீ.ல.சு.க | 47.09.205 | 65.28 வீதம் |
| | காமினிதிஸநாயக்க | ஐ.தே.க | 27.15.283 | 35.91 வீதம் |
| 1999.12.21 | சந்திரிகா | ஸ்ரீ.ல.சு.க | 47.09.200 | 62.20 வீதம் |
| | ரணில் | ஐ.தே.க | 36.02.740 | 35.81 வீதம் |
| 2005.11.17 | மகிந்தா | ஸ்ரீ.ல.சு.க | 48.87.152 | 50.29 வீதம் |
| | ரணில் | ஐ.தே.க | 47.06.366 | 48.43 வீதம் |
| 2010.01.26 | மகிந்தா | ஸ்ரீ.ல.சு.க | 60.15.934 | 57.88 வீதம் |
| | சரத்பொன்சேகா | ஐ.தே.க. | 41.73.185 | 40.15 வீதம் |
| 2015.01.08 | மைதிரி.சிறிசேன | ஐ.கூ.அமைப்பு | 62.17.162 | 51.28 வீதம் |
| | மகிந்தா | ஸ்ரீ.ல.சு.க | 57.68.090 | 47.58 வீதம் |

# 2015 தேர்தல் சில குறிப்புக்கள்:-

- 7வது ஜனாதிபதியைத் தெரிவு செய்த தேர்தல்.
- நாடுமுழவதும் சராசரியாக 70 வீதம்பேர் வாக்களித்துள்ளனர்.
- லட்சத்து 44 ஆயிரத்து 490 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர்.
- 12.500 நிலையங்களில் தேர்தல் வாக்களிப்பு இடம்பெற்றது.
- 22 தேர்தல் மாவட்டங்களில் 160 தேர்தல் தொகுதிகளில் நடைபெற்றது.
- நுவரெலியா மாவட்டத்தில் மிகக்கூடுதலாக 80 வீதம் பேரும் திருகோணமலை மாவட்டத்தில் 60 வீதம் குறைந்த வாக்குப் பதிவும் இடம்பெற்றது.
- கடந்தகாலத் தேர்தல்களைவிட இந்தத்தேர்தலில் குறைந்த வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.
- இத்தேர்தலில் 19 பேர் போட்டியிட்டுள்ளனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2010-2015 ஆண்டுகளின் தேர்தல் வாக்களிப்பு வீதங்கள்

யாழ் தேர்தல் மாவட்டம்:-

| Political Party | 2010 | Percentage | Political Party | 2015 | Percentage |
|---|---|---|---|---|---|
| UPFA | 44,154 | 24.75% | UPFA | 74,454 | 21.85% |
| NDF | 113,877 | 63.84% | NDF | 253,574 | 74.42% |
| OTHER | 20,338 | 11.40% | OTHER | 12,723 | 3.73% |

வன்னி தேர்தல் மாவட்டம்:-

| Political Party | 2010 | Percentage | Political Party | 2015 | Percentage |
|---|---|---|---|---|---|
| UPFA | 28,740 | 27.31% | UPFA | 34,377 | 19.07% |
| NDF | 70,367 | 66.86% | NDF | 141,417 | 78.47% |
| OTHER | 6,145 | 5.84% | OTHER | 4,431 | 2.46% |

மட்டக்களப்பு தேர்தல் மாவட்டம்:-

| Political Party | 2010 | Percentage | Political Party | 2015 | Percentage |
|---|---|---|---|---|---|
| UPFA | 55,663 | 26.27% | UPFA | 41,631 | 16.22% |
| NDF | 146,057 | 68.93% | NDF | 209,422 | 81.62% |
| OTHER | 10,171 | 4.80% | OTHER | 5,533 | 2.16% |

அம்பாறை தேர்தல் மாவட்டம்:-

| Political Party | 2010 | Percentage | Political Party | 2015 | Percentage |
|---|---|---|---|---|---|
| UPFA | 146,912 | 47.92% | UPFA | 121,027 | 33.82% |
| NDF | 153,105 | 49.94% | NDF | 233,360 | 65.22% |
| OTHER | 6,545 | 2.13% | OTHER | 3,430 | 0.96% |

திருகோணமலை தேர்தல் மாவட்டம்:-

| Political Party | 2010 | Percentage | Political Party | 2015 | Percentage |
|---|---|---|---|---|---|
| UPFA | 69,752 | 43.04% | UPFA | 52,111 | 26.67% |
| NDF | 87,661 | 54.09% | NDF | 140,338 | 71.84% |
| OTHER | 4,659 | 2.87% | OTHER | 2,907 | 1.49% |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவஞ்சலி

(11ம் ஆண்டு)

# அமரர் க.யூட் நடேசன்

பிறப்பு
18.03.1944



மறைவு
28.01.2004

"வாழ்வோர் மேலும் இறந்தோர் மேலும் ஆட்சி செலுத்தவே கிறிஸ்து இறந்தும் வாழ்கிறார்"

என்னும் இறைவார்த்தையின் நம்பிக்கையிலே இருந்து கொண்டு இறைவா. இதோ 11ம் ஆண்டு நிறைவான இந்நாளினிலே உமது திருப்பாதம் வந்தடைந்த எனது கணவருக்கு, நிலை வாழ்வில் நம்பிக்கை கொண்டு உயிர்ப்பின் மகிழ்ச்சியில் இணைத்துக் கொள்வீராக. கண்ணெனக் காத்திட்ட உம் பிரிவால் காலங்கள் தந்திட்ட வேதனைகள் கண்களில் நீர் துளிக்க கனத்த இதயத்துடன் வேண்டுகின்றோம்..

மண் சஞ்சிகையின் எழுத்தாளர்

திருமதி. ஜெயா நடேசன் - பிள்ளைகள்
ஜேர்மனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதநேயப்பணியில் இணைந்துகொண்டவர்கள்!..

தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள் மற்றும்கல்விச்செலவுகளைப் பொறுப்பேற்றுஉதவும் மனிதநேயப்பணிகளில் மண் சஞ்சிகையோடு இணைந்து கரம்கொடுத்துவரும் அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகின்றோம்.எனவே நீங்களும் இந்தப்பணியுடன் இணைந்துஉதவலாம்.இதுவரைஇத்திட்டத்தில் இணைந்து உதவிவரும் நல்லுள்ளங்களின் விபரம்....

01. திருமதி.சிவதர்சினி.பிராங்ளின் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா) - 480-00 யூரோ
02. திரு.திருமதி.யஜிந்தா.ராஜ்மோகன் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு -மட்டக்களப்பு - 480-00 யூரோ
03. செல்வன்.விஷ்ணு,செல்வி.பவுத்ரா.விஜயகௌரி-சுவீஸ்லாந்து
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - கிளிசொச்சி - 480-00 யூரோ
04. செல்வன்.நகுல்.துரையரங்கன - ஜேர்மனி.
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - திருகோணமலை- 480-00 யூரோ
05. செல்வி.அஜந்தி.அழகராசா - பிரித்தானியா
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா - 480-00 யூரோ
06. செல்வன்.ஜெய்சன்.ஜெயபாலன் - பிரித்தானியா
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - திருகோணமலை- 480-00 யூரோ
07. திருமதி.பராசக்தி.பரமசாமி - பிரித்தானியா
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு -வவுனியா - 480-00 யூரோ
08. திருமதி.ரதி.சின்னத்துரை - பிரித்தானியா
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா - 480-00 யூரோ
09. திருமதி.பிரிந்தாவனி.தனபாலசுந்தரம் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா - 480-00 யூரோ
10. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா - 480-00 யூரோ
11. செல்விகள்.வினிஷா.இராஜ்குமார்,தீபா.தர்மராசா - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு -மட்டக்களப்பு) - 240-00 யூரோ
12. செல்வி.சுகிர்தா.தவராஜ் - ஜேர்மனி
((ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு- கிளிநொச்சி - 200-00 யூரோ
13. செல்வன்.சியாந்த்.எமில்.சர்வானந்தன் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு - வவுனியா - 200-00 யூரோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பளிப்புக்கள் 6420-00 யூரோ....

மண் சஞ்சிகையால் நீண்ட காலமாக முன்னெடுக்கப்பட்டுவரும் தாயக ஆதரவற்றோர், வலுவிழந்தோர், முதியோர் திட்டங்களுக்காக சென்ற ஆண்டில் (2014) மட்டும் 6420-00 யூரோக்களை நேரடியாக அனுப்பி வைத்திருக்கிறோம்.. இத்திட்டத்திற்குப் பங்களித்துக் கரம் கொடுத்துவரும் அன்பு உள்ளங்கள் அனைவருக்கும் கரம்கூப்பி நன்றிதெரிவித்துக்கொள்கிறோம். விபரம்...

| மண்இதழ் | - மாதம் | - இல்லத்தின் பெயர் - | இடம் | - தொகை |
|---|---|---|---|---|
| 163 | - தை - மாசி | - ரூத்மிஷன் | -கிளிநொச்சி | - 710-00 |
| | | -அருளகம் | -வவுனியா | - 1000-00 |
| 164 | - பங்குனி-சித்திரை | -இந்து அன்பகம் | -வவுனியா | - 690-00 |
| | | -அருளகம் | -வவுனியா | - 500-00 |
| 165 | - வைகாசி-ஆனி | - சிறிசண்முகா இல்லம் | -திருகோணமலை | - 480-00 |
| 166 | - ஆடி-ஆவணி | -ரூத் மிஷக் | -கிளிநொச்சி | - 700-00 |
| | | -யோகசுவாமிஇில்லம் | -செங்கலடி | - 400-00 |
| 167 | -புரட்டாதி-ஐப்பசி | - மாணிக்கவாசகர்-இல்லம் | மொறக்கொட்டாஞ்சேனை | - 480-00 |
| 168 | -கார்த்திகை-மார்கழி | - இந்து அன்பகம் | - வவுனியா | - 500-00 |
| 169 | - தை-மாசி | -சிறிசண்முகாஇல்லம் | திருகோணமலை | - 480-00 |
| | | -திருஞானசம்பந்தர் | - மட்டக்களப்பு | - 480-00 |

---------

மொத்தம் 6420-00

---------

| | | | |
|---|---|---|---|
| ரூத் மிஷன் | - கிளிநொச்சி | - 1410-00 | யூரோ |
| அருளகம் | - வவுனியா | - 1500-00 | " |
| இந்து அன்பகம் | - வவுனியா | - 1190-00 | " |
| சிறிசண்முகா | - திருகோணமலை | - 960-00 | " |
| யோகசுவாமிஇல்லம் | - செங்கலடி | - 400-00 | |
| மாணிக்கவாசகர் | - மொறக்கொட்டா | - 480-00 | |
| திருஞானசம்பந்தர் | - மட்டக்களப்பு | - 480-00 | |
| | மொத்தம் | - 6420-00 | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதரவற்றோர் நிதி உதவிக் கணக்கு

ஆரம்ப இருப்பு 30.10.2014 +3151-29

அன்பளிப்புகள்:-

01. திருமதி. சிவதர்சினி பிராங்ளின் - Duisburg +40-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

02. திருமதி. ரதி சின்னத்துரை - London +40-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

03. திரு.திருமதி. யஜிந்தா. ராஜ்மோகன் - Duisburg +40-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

04. திருமதி. பராசக்தி. பரமாமி - London +40-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

05. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - Essen +40-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)

06.செல்வி.அஸ்வர்யா பாஸ்கரன்-(பிறந்தநாள் அன்பளிப்பு - London + 60-00

09.செல்வி.லாவண்யா அற்புதராசா-(பிறந்தநாள்அன்பளிப்பு -Soest + 35-00

10.திருமதி.ஜெயா நடேசன்(கணவனாரின் நினைவு அன்பளிப்பு -Havixberg + 20-00

11.திரு.சிவகுமாரன் சாந்தலிங்கம் -Pfrozheim + 20-00

-

-------

3486-29



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

+ 3486-29

அனுப்பியது: –

1- ஸ்ரீ சண்முகா மகளிர் இல்லம் - திருகோணமலை- 480-00

2- திருஞானசம்பந்தர் குருகுலம் களுவாஞ்சிக்குடி - 480-00

3- ரூத் மிஷன் சிறுவர் இல்லம் - கிளிநொச்சி - 460-00

4- ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அருளகம் - வவுனியா - 500-00

வங்கிக்கட்டணம் 4 x 35-00 - 140-00

-------

- 2060-00

வங்கிவரி..மண் சஞ்சிகை வங்கிக்கணக்கிற்கு..

30.11.2014 -- 11-84

31.12.2014 -- 14-54

-----

26-38 - 26-38

-சுவீஸ் நாட்டிலிருந்து ஆதரவற்றோர்நிதிக்கு வருடாந்தம் உதவிசெய்பவர்களான செல்விபவுத்திரா,செல்வன் விஷ்ணு ஆகியோர் 2014ம் ஆண்டிற்குரியது வரவாகக்

கணக்கிட்டது +480-00

இவர்களால் எமக்கு அனுப்பிய பணம் -406-58

-------

73-42 - 73-42

----------

- 2159-80 -2159-80

---------

31.01.2015 ல் மீதி கையிருப்பு + 1326-49

--------

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# RUTH MISSION

Jeya puram north,
Jeya puram.

E-mail : g.jeyaratnam@ymail.com,
T.p : 0778380254 / 0213202588

01/12/2014.

அன்பின் ஆசிரியர் அவர்கட்கு,

அன்பின் வாழ்த்துக்கள்,

நாம் நலம். உங்கள் நலனுக்காக இறைவனிடம் மன்றாடுகின்றோம். நீங்கள் அனுப்பிய 600 புத்தக விற்பனைப் பணமாக 96.990/- 25/11/2014 அன்று கிடைத்தது. மிக்க நன்றி.

இவ்வருடம் அனுப்பவேண்டிய மண் 1160-ம் புத்தக [illegible] 100 புத்தக குறைக்கப்பட்டது. ஆனால் நீங்கள் 28/07/2014 அனுப்பிய 700 புத்தகங்களில் 100 புத்தக குறைக்கப்பட்டு 600 புத்தக 25/12/2014 கிடைத்தது. தயவு செய்து மீதிப் பணத்தையும் [illegible] அனுப்பி வைத்தால் மிகவும் உதவியாக இருக்கும். தயவு செய்து கேட்டுக்கொள்கிறோம். [illegible] அருட்பணி [illegible] மிகவும் [illegible] உள்ளது.

உங்கள் பணியின் அருட்பணி சிறப்பாக நடைபெற இறைவனிடம் மன்றாடுகின்றேன்.

உங்கள் பதிலை ஆவலுடன் எதிர்பார்க்கின்றேன்.

இறை ஆசிகள்.

நன்றி

இப்படிக்கு,
அன்பின் சகோதரி
Sis Gladys Jeyaratnam



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து அன்பகம் சிறுவர் இல்லம்
# හින්දු අන්පගම් ළමා නිවාසය
# Hindu Anpakam Children Home

2ம் கட்டை, மன்னார் வீதி, வேப்பங்குளம், வவுனியா
Regd No :NEP/DS/V/SS/111
: HA/04/Y/24
2nd Mile Post, Mannar Rd, Vepankulam, Vavuniya

resident
Miss.K.Jeyaram

Vice President
Mr.N.Tharmarasah

Secretary
Mrs.S.Nirmala

Treasurer
Mr.K.Sabaratham

Vice Secretary
Mr.J.Jegvan

Asst Treasurer
.Subramaniyam

Accountants
Mr.T.Kurukulasingam

Legal Adviser
Mr.K.Thayaparan LL.B (Att)

Board of Members
Mr.K.Kirupagaran
Mr.R.Tharmasalan
Mr.K.Nadarasasingam
Mrs.K.Leelawathy
Mr.V.Karthikesu
Mr. .Vijayaratnam
Mr.K.Tharmalingam
Mrs.K.Chandraleela
Mrs.J.Thadsajini

Patron
Mr.S.AThijakarajah
Mr.P.Sathiyarathan
Mr.V.Nadarajah

Account
32020254291
Hatton National Bank
Vavuniya

Contact
24 222 3683
77 6143628
E-Mail
induanpakam@gmai .com

17-11-14

V.Sivarajah
amwinchovel 18a
47249 duisburg
Germany

ஐயா

மேற்படி முகவரியில் அமைந்துள்ள எமது இல்லத்திற்கு தாங்கள் தங்களது உறவினர்கள் நண்பர்கள் மூலமாக 500 யூரோவினை வழங்கியுள்ளீர்கள் இதற்கு, நாங்களும் எமது இல்லச்சிறார்களும் மேலும் மேலும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அந்தவகையில் தாங்கள் அனுப்பிய 500 யூரோவில் 200 யூரோவினை பெரியசாமி தாயவதனி என்னும் சிறுமியின் கல்வி வளர்ச்சிக்காகவும் மிகுதி 300 யூரோவும் எமது இல்ல அலுவலகத்திற்கு மிகவும் அத்தியவசியமாக தேவைப்படும் போட்டோகொப்பி இயந்திரத்தினையும் கொள்வனவு செய்ய எண்ணியுள்ளோம். இருந்தும் அதற்கு இதனை கொள்வனவு செய்வதற்கு இன்னும் பணம் போதாமல் உள்ளது. எனவே தாங்கள் இதனை முழுமையாக கொள்வனவு செய்வதற்கு தங்களது மண் சஞ்சிகையின் வாசகர்கள் ஊடாக மேலும் 300 யூரோவினை பெற்றுத் தந்துதவுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி

கி. ஜெயராம்
தலைவர்
இந்து அன்பகம்
வேப்பங்குளம்
வவுனியா.

நிர்மலா
செயலாளர்
இந்து அன்பகம்
வேப்பங்குளம்,
வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திரு செல்லத்துரை விவேகானந்தன் (விவே)

பிறப்பு: 24 ஒக்ரோபர் 1945 - இறப்பு: 10 சனவரி 2015

யாழ். சண்டிலிப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், பருத்தித்துறை, சுவிஸ் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும்கொண்ட செல்லத்துரை விவேகானந்தன் அவர்கள் 10-01-2015 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

இவர் மண் சஞ்சிகையின் எழுத்தாளர் நீண்டகால வாசகர். ஐரோப்பிய ஊடகப்பரப்பில் சி.வி ஆனந்தன் என்ற புனைபெயரில் பலதரப்பட்ட செய்திகளைத் திரட்டி உடனுக்குடன் லண்டன் தமிழ்வானொலி, ஐ.பி. சி.வானொலி. மண் சஞ்சிகை போன்ற ஊடகங்களின் ஊடகவியலாளராக நீண்டகாலம் செயற்பட்டவர். சுவீசிலுள்ள பல அரச பொதுதாபனங்களுடன் இணைந்து இலங்கை, இந்தியா போன்ற வறிய நாடுகளுக்குப் பலவகை உதவிகளைப்புரிந்து மனிதநேயப் பணிகளையும் மேற்கொண்டு சிறந்த ஒரு சேவையாளராகத் தான் இறக்கும்வரை பணிபுரிந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கவிடையமாகும்... அன்னாரின் மறைவையொட்டி மண் சஞ்சிகையினரும் கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறார்கள்!..

-ஆசிரியர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி
அருளகம்-வவுனியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WISSEN, KULTUR & LITERATUR
ZWEIMONATLICHE AUSGABE
HTTP://WWW.MANN-ERDE.COM

# ERDE
## Mann

2015
GERMANY
AUSGABE 169

# எமதினிய பொங்கல் நல் வாழ்த்துக்கள்



| | | |
|---|---|---|
| வருட சந்தா | ஜேர்மனி | 15€ |
| | ஏனைய நாடுகள் | 20€ |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org